ௐ

பத்ரி - கேதார் - காசி - நேபாள் யாத்திரை

Be aware of yourself
Be aware of the world

இறைபணி அன்பர்கள்
D-45, 8-வது குறுக்குச்சாலை,
தில்லைநகர், திருச்சிராப்பள்ளி - 18.

32-2

பத்ரி-கேதார்-காசி-நேபாள் யாத்திரை

Be aware of yourself
Be aware of the world

இறைபணி அன்பர்கள்
D-45, 8-வது குறுக்குச்சாலை,
தில்லைநகர், திருச்சிராப்பள்ளி-18.

பிரார்த்தனை

அம்மா! உன் அளவற்ற கருணையையே எனக்குத் துணையென்று நம்புகிறேன். உன்னையே எப்போதும் நினைக்கும் மனத்தை எனக்குக் கொடு. தாயே, எனக்குப் புலன் இன்பங்கள் வேண்டாம். பெயர் வேண்டாம். புகழ் வேண்டாம். சித்திகளும் எனக்கு வேண்டாம். தூய்மையான பக்தியே, உலக ஆசைகளால் மாசுபடாத பக்தியே, உலக சுகங்களைத் தேடாத கலப்படமற்ற பக்தியே எனக்குவேண்டும் அதற்காகவே நான் உன்னைப் பிரார்த்திக்கிறேன். அதை எனக்கு அருள் கூர்ந்து கொடு. ஓ! தாயே, உன் குழந்தை நான். இந்த உலகத்தின் மாயையால் அலைக்கழிக்கப்பட்டு உன்னை மறந்துவிடாதபடி என்னைக் காப்பாற்று. பணத் தாசையும், காமமும் என்னிடம் தோன்றாதபடி என்னைக் காப்பாற்று. உன்னைத் தவிர இந்த உலகத்தில் வேறு எதையும் காணாத நிலையை எனக்கு அருள். எனக்கு எப்படி உன் பெயரைப் பாடவேண்டும் என்றும் தெரியவில்லை. உன்னை அடையச் செய்யும் பக்தியையும், ஞானத்தையும் மட்டுமே கொடு. உன் எல்லையற்ற கருணையை என்மீது பொழியும் படிச் செய்.

"காளியிடம் பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர் செய்த
உணர்ச்சி நிறைந்த பிரார்த்தனை"

பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர், பக்கம் — 415.
வெளியீட்டாளர்: ஸ்ரீ ராமகிருஷ்ணர் மடம்,
சென்னை — 4.

ஜோதி பிரிண்டர்ஸ், திருச்சி - 2. போன்: 25416.

ஓம் ஸர்வ தேவ தேவிஸ்வரூபாய
ஸ்ரீ ராம கிருஷ்ணாய நம:

திருச்சி பொன்மலையில் ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சமிதி என்ற இயக்கம் இருக்கிறது. இந்தக் குழுவின் அங்கத்தினரான சகோதர, சகோதரிகள் குருதேவரின் கருணையால் ஒரே குடும்பமாகப் பழகி, எந்த ஒரு ஸத் காரியத்திலும் பங்கேற்று, ஒருவருக்கொருவர் உதவி செய்து மகிழ்ச்சி பெறுபவர்கள். இந்தக் குழுவின் மூலமாக பத்ரி, கேதார் யாத்திரை ஒன்றும், இரண்டாவதாக காசி யாத்திரை ஒன்றும் நடந்தது.

எங்கள் முதல் யாத்திரையான பத்ரி கேதாருக்கு டில்லியில் இருக்கும் ''சங்கரன் டிராவல்ஸ்'' என்பதை அறிமுகப் படுத்தியவர் சகோதரி திருமதி. சரஸ்வதி ஜெயராமன் என்பவர். சென்னையிலும், டில்லியிலும் அவருடைய பிள்ளைகள் இருப்பதால் அங்கும் குடும்பங்கள் இருக்கின்றன. இங்கிருந்து மாற்றலாகிச் சென்ற சகோதரிகள் மதராஸிலும் உள்ளனர். இப்படி எங்கள் குருதேவர் குடும்பம் எல்லா இடங்களிலும் இருக்கின்றன.

முதலில் சென்ற பத்ரி யாத்திரையின்போது ரயிலில் 2 இரவுகளும், ஒரு பகலும் பிரயாணம் செய்யவேண்டும் என்பதை அறிந்து, திருமதி சரஸ்வதி, திருமதி சரளா சந்தான கிருஷ்ணன், திருமதி பருவதம் மூவரும் எங்களுக்குச் சிற்றுண்டி, சாப்பாடு எல்லாம் தயார் செய்து கொடுத்து, பிரயாணம் வசதியுடன் தொடர வகைசெய்தனர். சென்னையில் இறங்கிய எங்களுக்கு ஸ்ரீ ராமகிருஷ்ணமடத்தில் மதியம் பிரசாதம் அளித்தனர். மாலையில் ஸ்ரீ சாரதா தேவி மடத்தில் பிரசாதமும், ஆசியும் மாதாஜி வழங்கினார்.

இரண்டு யாத்திரைகளுக்கும் செல்லும்போது, சென்னையில் நாங்கள் தங்குவதற்கு வசதி அளித்த முருகன் கல்யாண மண்டபத்தாருக்கு எங்கள் மனமார்ந்த நன்றி. பத்ரி கேதார் யாத்திரைக்கு, முறைப்படி எங்களை குறிப்பிட்ட இடங்களுக்கு அந்தந்த நேரத்தில் அழைத்துச் சென்று எல்லாவற்றையும்

விளக்கிக் காட்டி சௌகர்யமாகத் திரும்ப டில்லியில் சேர்த்த சங்கரன் டிராவல்ஸ் சங்கர ஐயர் அவர்களுக்கும் நன்றி உரித்தாகுக.

டில்லியில் இருந்து நாங்கள் புறப்படும்போது எங்கள் சகோதரி ஸரஸ்வதி ஜெய்ராமனின் பிள்ளைகளான மணி, வெங்கடேசன் குடும்பத்தாரும், எங்களுக்குப் பிரயாணத்திற்குத் தேவையான சாப்பாடு தயார் செய்து கொடுந்து உதவிகள் செய்து வழியனுப்பினர்.

காசி யாத்திரையில் நாங்கள் காசி, அலகாபாத், அயோத்தி, கயா ஆகிய இடங்களில் நகரத்தார் விடுதிகளில் தங்குவதற்கு ஏற்பாடுகள் செய்து கொடுத்த திரு சண்முகம் செட்டியார் அவர்களுக்கும் எங்கள் நன்றி. திரு ரங்கராஜனின் நண்பரான காசியில் உள்ள G. D. நாகர் என்பவர் எங்களுக்கு 'சீதா டிராவல்ஸ்' பஸ் பேசி எங்கள் யாத்திரைக்கு ஏற்பாடு செய்து கொடுத்தார். அதுமட்டுமின்றி காசியில் உள்ள எல்லா இடங்களைப் பார்க்கவும், நேபாளம் போவதற்கும் ஆயத்தங்கள் செய்து கொடுத்தார். நேபாளத்தில் இடங்களைப் பார்க்க வழிகாட்டி ஒருவரையும் அமைத்துக் கொடுத்தார், அவர் செய்த உதவியும், காட்டிய அன்பும் சொல்லில் அடங்காதது. எப்படி நன்றி கூறுவது எனத் தெரியவில்லை. தாய், சேய் பராமரிப்பாக இருந்தது.

நாங்கள் சென்ற இடங்களிலும், பிரயாணத்திலும் நேரத்திற்கேற்ப ருசியாக சமைத்துக் கொடுத்த ராமன் குழுவினருக்கும், அவருக்குத் தேவையான உதவிகளுடன் மேற்பார்வையிட்ட மணி மாமா அவர்களுக்கும் மிக்க நன்றி.

யாத்திரையில் கலந்துகொண்ட அனைவரும் ஒத்துழைப்பு கொடுத்து. கால நேரத்திற்கு தக்கவாறு யாத்திரையை வெற்றியுடன், குருதேவரின் அருளால் சுபமாக முழுமை பெறச் செய்தனர். இப்பணி தொடரும்.

இங்ஙனம்

இறைபணியில் அன்பர்கள்

பத்ரி கேதார் யாத்திரை 1991

கலந்துகொண்டவர்கள் -

1. D. ராதாகிருஷ்ணய்யா
2. R. திரிபுரம்
3. K. S. ராமகிருஷ்ணன்
4. R. பர்வதவர்த்தனி
5. S. ராஜகோபால்
6. R. அனந்தலக்ஷ்மி
7. மோதி. R. ராமுடு
8. R. அலமேலு
9. A. M. M. பார்த்தசாரதி
10. P. சந்திரா
11. R. துவாரகா நாத்
12. D. சுபாஷிணி
13. R. அனந்தகிருஷ்ணன்
14. A. ஜெயலக்ஷ்மி
15. L. ரங்கராஜன்
16. R. சாவித்திரி
17. M. இந்திரா அம்மாள்
18. E. மஞ்சுளா
19. சாந்தா பாலகிருஷ்ணன்
20. ஜெயலக்ஷ்மி
21. சுலோசனா மாணிக்கம்
22. M. ராமச்சந்திரன்
23. அனுசூயா
24. R. கருணாகரன்
25. K. சரஸ்வதி

காசி, நேபாள யாத்திரை

கலந்துகொண்டவர்கள் :

1. D. ராதா கிருஷ்ணய்யா
2. R. திரிபுரம்
3. S. ராஜகோபால்
4. R. அனந்தலக்ஷ்மி
5. மோதி R. ராமுடு
6. R. அலமேலு
7. A. M. M. பார்த்தசாரதி
8. P. சந்திரா
9. L. ரங்கராஜன்
10. R. சாவித்திரி
11. R. துவாரகாநாத்
12. D. சுபாஷிணி
13. K. M. பாலாஜி
14. B. சாந்தா
15. A. ராமச்சந்திரன்
16. R. பருவதம்
17. குப்புராஜ்
18. பர்வதம்
19. இளங்கோ
20. B. காஞ்சனா
21. A. சுப்புலக்ஷ்மி
22. மாணிக்கம்
23. சுலோசனா
24. M. ராமச்சந்திரன்
25. R. அனுசூயா
26. R. அனந்தகிருஷ்ணன்
27. A. ஜெயலக்ஷ்மி
28. பாலகிருஷ்ணன்
29. B. சாந்தா
30. சரோஜா பாஸ்கரமூர்த்தி




பத்ரிநாத் ஆலயம்



கேதார்நாத் ஆலயம்




கயா போதிமரம்




மஹாபுத்தர் (உயரம் 80 அடி)





அலகாபாத் துளஸி மானச மந்திர்




கேதார் நாத்

ஆதி சங்கரர் ஐக்கியமான இடம்



கோரக்பூர் ஆலயம



புத்தகயா — தாய்லாந்து



நேப்பாள் — ஒரு புத்தர் ஆலயம்



நேப்பாள் — புத்தர் ஆலயம்
(தண்ணீர் இல்லாமல் வியர்வையினால் கட்டப்பட்டது)

ஸ்ரீ ராமகிருஷ்ணாய நம:

பத்ரி கேதார் யாத்திரை

1991ஆம் வருடம் ஆகஸ்டு மாதம் 18-ம் தேதி திருச்சி ஜங்சனில் மாலை மரியாதைகளுடன் நின்ற பரபரப்பான கூட்டம் வேறு யாருமல்ல. எங்களை வழியனுப்ப வந்தவர்கள் தான். ஆம். அன்றுதான் எங்கள் பஜனைக் குழுவின் 25 அங்கத்தினர்கள் பல மாத முயற்சிகளுடனும், ஏற்பாடுகளுடனும் தீர்மானித்த கேதார், பத்ரி யாத்திரையைத் தொடங்கினோம். காலை 6-15 மணிக்கு பல்லவனில் சென்னை சென்ற எங்களை K. P. N. பஸ் வரவேற்று ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்திற்கு அழைத்துச் சென்றது. அங்கு மதிய விருந்துபசாரம் நடந்த பின் முருகன் கல்யாண மண்டபத்திற்குச் சென்று 4 மணி நேரம் ஓய்வு பெற்றோம். பின்னர் 5 மணியளவில் புறப்பட்டு ஸ்ரீ சாரதா மடம், ஸ்ரீ ராமகிருஷ்ண மடம் ஆகிய இடங்களில் நாமசங்கீர்த்தனம் செய்து, பெரியவர்களின் ஆசிகளுடனும், பிரசாதங்களுடனும் விடைபெற்று சென்ட்ரல் ஸ்டேஷனை அடைந்தோம். அங்கு நாங்கள் புறப்பட வேண்டிய தமிழ்நாடு எக்ஸ்பிரஸ் இரவு 9மணிக்குத்தான். அந்த இடை நேரத்தில் அங்கும் பல உறவினர்கள், நண்பர்கள் வழியனுப்ப வந்து அளவளாவிச் சென்றனர். எங்கள் பயணம் 2 இரவு, 1 பகல் முழுவதும் ரயிலில் தான் என்பதை அறிந்த சென்னையிலிருந்த எங்கள் அங்கத்தினர்கள், எங்கள் சாப்பாட்டிற்குக் குறைவைக்காமல் இட்லி, சப்பாத்தி, புளி சாதம், தயிர்சாதம் என்று தயார்செய்து கொடுத்து எங்களை வழியனுப்பினார்கள். நாங்களும் எந்தச் சிரமமும் இல்லாமல் பஜனைகளைப் பாடிக்கொண்டும், லூட்டி அடித்துக் கொண்டும் குதூகலத்துடன் 20ஆம் தேதி காலை டில்லியை அடைந்தோம். அங்கு எங்களை வரவேற்ற முதல் நபர் மழை. பின் எங்கள் இயக்க சகோதரியின் பிள்ளை மணி எங்களையெல்லாம் வரவேற்று ஆவன செய்து நாங்கள் தங்கவேண்டிய கரோல் பாக்கிலுள்ள விடுதியில் சேர்த்தார்.

2

இனி எங்கள் பயணம் தொடங்க வேண்டியது இரவு 10-30 மணிக்கு சங்கரன் டிராவல்ஸ் பஸ்ஸில்தான். அந்த முழுநாளையும் வீண் செய்யாது டில்லியில் கடைவீதிகளுக்குச் சென்று களித்தோம். பின் அந்த பஸ்ஸின் உரிமையாளர் திரு. சங்கர ஐயரை சந்தித்துப் பேசி அளவளாவினோம். மதிய உணவிற்குப் பின் ஓய்வு பெற்றோம். மாலை 7 மணி அளவில் சங்கர ஐயர் எங்கள் விடுதிக்கு வந்து அவர் எங்களுடன் வர முடியாத நிலையைச் சொல்லி, நாங்கள் முறைப்படி செல்லவேண்டிய க்ஷேத்திரங்களையும், அதன் ஐதீகங்கள், விசேஷங்களையெல்லாம் விளக்கிச் சொல்லிவிட்டு, அவர் பிள்ளைகளை எங்களுடன் அனுப்பிப் பயணத்தைத் தொடரச் சொன்னார். அவர் குறிப்பிட்டபடி நாங்கள் இரவு 10-30 மணிக்கு அவர் பஸ்ஸில் புறப்பட்டு மறுநாள் 21ஆம் தேதி புதன்கிழமை காலை 3-45 மணி அளவில் ஹரித்துவார் போய்ச் சேர்ந்தோம். அங்கு மதராஸி தர்மசாலா என்ற விடுதியில் எங்களைச் சேர்க்க, நாங்கள் அவரவர் இடங்களையும், சாமான்களையும் ஒதுக்கிக் கொண்டோம். 5 மணிக்கு கங்கா ஸ்நானம் செய்ய எல்லோரும் புறப்பட்டோம். அங்கு பெண்கள், ஆண்களுக்கென்று தனித்தனித் துறை என்பதால் தனித்தனியாகப் பிரிந்தோம். கங்கை புது முகங்களை வரவேற்கும் ஆரவாரக் களியாட்டத்துடன் எங்களை வரவேற்றது. நாங்களும் அந்தத் தெளிந்த நீரின் இரைச்சலுடன் கூடிய ஓட்டத்தையும் அழகையும் ரசித்துக்கொண்டே அதைத் தழுவினோம். அந்த படித்துறையில் 2, 3 படிகளுக்குக் கீழ் இறங்க வாய்ப்பு கிடையாது. இரும்புக் கம்பிகளால் தடுத்து சங்கிலியும் பூட்டி இருக்கின்றனர். அதன் துணை கொண்டால் பயமில்லை. என் பாதங்கள் கங்கையைத் தழுவிய மறுகணமே என் உடம்பில் மின் வேகம் பாய்ந்த ஒரு உணர்வு உண்டாயிற்று. கங்கையைத் தழுவிய எல்லோருக்கும் ஒரே சந்தோஷம். அதைவிட்டு நகர மனமில்லை. இருந்தாலும் அடுத்த நிகழ்ச்சிக்குப் பங்கம் ஏற்படக்கூடாதென்று உரிய நேரத்தில் ஸ்நானத்தை முடித்துக்கொண்டு ஆரத்தி செய்து, துதி பாடிவிட்டுப் பிரிந்து சென்றோம். காலைச் சிற்றுண்டி முடித்தபின் எங்களுக்கு வழித்துணைவராக வந்த சங்கர ஐயர் அங்கே இருக்கும் ஒரு ஐயப்பன்

ஆலயத்திற்கு அழைத்துச் சென்றார். பகவானின் திவ்யநாம கோஷத்துடன் கால்நடையாகவே அவரைப் பின்தொடர்ந்தோம். ஒரு பிரபுவின் மகன் ஏழு வருடங்கள் ஊமையாக இருக்க, அவர் கனவில் விமோசானந்தர் என்ற சாது தோன்றி ஐயப்பன் கோவில் கட்டினால் பேச்சு வருமென்று சொல்ல, அவரும் கட்டினார். அவனும் பேச ஆரம்பித்தானாம். அந்த ஆலய தரிசனம் செய்தோம். பின் பஸ்ஸில் புறப்பட்டு ரிஷிகேசம் சென்றோம். அங்கு பஸ்ஸை விட்டு இறங்கியதும் லட்சுமணன்ஜூலா என்ற பாலத்தை அடைந்தோம். இது ஒரு தொங்கும் பாலம். ஊஞ்சல் மாதிரி ஆட்டத்துடன் கூடிய இந்தப் பாலத்தை எங்கே கீழே ஓடும் கங்கையில் விழுவோமோ என்று எண்ணாமல் ரசித்துக்கொண்டே கடந்தோம். அக்கரையில் இராம இராவண யுத்தத்தில், இராமன் இராவணனைக் கொல்ல இராவணன் பிராமணன் என்ற காரணத்தால் இராமனுக்கு ப்ரம்மஹத்தி தோஷம் ஏற்படாமல் அதை நீக்க இலட்சுமணன் தவம் செய்த இடமான இலட்சுமணன் கோயிலை தரிசித்தோம். அருகிலேயே இருந்த சிஷ்யர்கள் நால்வருடன் கூடிய ஆதிசங்கரர் ஆலயம் தரிசனம் கிட்டியது. பின் சாலையின் இருபுறமும் பலவிதமான கடைகளையும் கூட்டத்தையும் பார்த்தவாறே சிறிது தூரம் கடந்த பின், கீதா பவனம் என்ற ஆலயம் அடைந்தோம். அந்த ஆலயச் சுவர்கள் சுற்றிலும் கீதை எழுதப்பட்டிருக்கிறது. இங்கு ராதாகிருஷ்ணர், லட்சுமி நாராயண மூர்த்தி, இராம லட்சுமண சீதா ஆகிய சந்நிதிகள், அடுத்து ஸ்வர்க்காசிரமம் என்ற ஒரு இடம். அக்காலத்தில் இங்கு இருந்த ஒரு தனவந்தர், பசி, குளிர் தாங்கவேண்டி யாத்ரீகர்களுக்கு உணவும், கம்பளியும் தர்மம் செய்ய, மக்கள் அவருக்கு ஒரு சிலை செய்து மாளிகை எழுப்பியுள்ளனர். வெயிலின் அருமை நிழலில் தெரியும் என்பதுபோல் மக்களுக்கு அவர் செய்த உதவியும், தங்குவதற்குக் கொடுத்த இடமும் சுவர்க்கமாக இருந்ததாம். அதனால் அந்த இடத்திற்கு ஸ்வர்க்காசிரமம் என்று பெயர் சூட்டி இருக்கின்றனர். அடுத்து சிறிது தூரத்தில் பரமார்த்த நிகேதன் ஆலயம் சென்றோம். இங்கு உள்ளே நுழைந்ததும் பூங்காவனத்தில் அங்கங்கே வைக்கப்பட்டது போல் சிலை வடிவில் ஜடாயு முக்தி, ஹரிச்

சந்திர மயான காண்டம், கண்ணன் மீரா, சத்யவான் சாவித்திரி, சபரி முக்தி, கண்ணன் வாயில் அண்டம் காணும் யசோதை, பகீரதன் தவம் முதலியவைகளைப் பார்த்துக் கொண்டே ஒரு குழாய்ப் பக்கம் வந்தோம். தாகத்திற்கு அதில் யாவரும் நீர் பருக அது ஒரே குளிர்தண்ணீராகவும், ருசியாக வும் இருக்க அதையும் எல்லோரும் ரசித்தோம். அதைக் கடந்து உள்ளே நுழைந்தால் சிவன், சரஸ்வதி, விராட் ரூபம் ஆகிய சிலை வடிவங்கள் பெரிதாக, பிரதானமாகக் காட்சி அளித்தன. ஒவ்வொரு மூர்த்திக்கும் மூன்று புறமும் கண்ணாடிகளை வைத்து பல உருவங்கள் காட்சி தருவதைப் பார்த்தால் கடவுள் அந்தர்யாமியாக எங்கும் இருக்கிறார் என்பதைப் புலப்படுத்துவது போல் இருக்கும். இதைக் கடந்து உட்புறப் பிரகாரம் சுற்றினால் அங்கு நவக்கிரகங்கள், பூரி ஜகந்நாதர், அனுசூயா மும்மூர்த்திகளுடன் இருப்பது, விது ரன் மனைவி பகவானுக்குப் பழத்தோல் கொடுக்கும் காட்சி, வெளியில் தசாவதாரம் ஆகியவைகள் காட்சி தருகின்றன. இந்த ஆலய தர்ம ஸ்தாபனத்தின் மூலம் இலவசப் பள்ளி, இலவச வைத்தியம், சாதுக்களுக்கு அன்னதானம் எல்லாம் நடத்துகிறார்கள் என்பதை அறிந்த நாங்கள் அவரவர்க்கு இயன்றதை நன்கொடையாக அளித்தோம். அதற்கேற்ப பிரசாதங்கள் பெற்றுக்கொண்டு வெளியேறியபோது வாசலின் எதிர்ப்புறம் ஒரு நுழைவாயில் இருந்தது. அதன்மேல் புறப்பட ஆயத்தமாக இருப்பதுபோல் கீதா ரதம் கம்பீரமாக நின்ற காட்சி எல்லோருடைய கவனத்தையும் ஈர்த்தது. அதன் வெளிப்புறத்தில் ஒட்டினாற்போல் கங்கை ஓடுவதைப் பார்க்க அழகாகவே இருந்தது. இதை ரசித்தவாறே நாங்கள் வந்த வழியிலேயே நடையைக் கட்டினோம். இறுதியில் சத்ருக்கனன் கோயில் தரிசனம் செய்தோம். பின் நாங்கள் போகவேண்டிய பஸ் அந்த இடத்திற்கு வராததால் யாவரும் நிழல் இருக்கும் இடங்களில் உட்கார்ந்து இளைப்பாறினோம். பஸ்ஸில் புறப்படும்போது மணி 12-க்கும் மேல் ஆகிவிட்டதால் சிவானந்த ஆசிரமம் பார்க்க இயலவில்லை. மறுபடியும் ஹரித்வார் சென்று சாப்பிட்டு இளைப்பாறினோம். மாலை 4 மணி சுமார் புறப்பட்டு மலைமேல் இருக்கும் மானஸா தேவி

கோயில் பார்க்கச் சென்றோம். அங்கு நடந்து ஏற நேர மில்லாததால் எல்லோரும் வின்ச்சில்தான் சென்றோம். அந்த 'வின்ச்' நான்கு பேர் உட்கார்ந்து வெளிக் காட்சிகளைப் பார்க்க முடிவது போன்ற அமைப்பு. சிவப்பு, நீலம் என்று பல வண்ணக் கூடைகள் போன்று இருக்கும். ஒருபுறம் ஏற்றிக் கொண்டும் மறுபுறம் இறக்கிக்கொண்டும் இருப்பார்கள். க்யூவில் நின்றுதான் ஏறவேண்டும். ஏறஏற இயக்கிக் கொண்டேயிருக்கிறார்கள். ஏறும்போது மற்றொன்று இறங்கு வதையும் பார்க்கலாம். ஏறும்போது நம் கண்ணுக்குத் தெரிந்த பூஞ்சோலைகளும், கட்டிடங்களும் இயற்கைக் காட்சிகளைப் பார்க்க அந்தப் புது அநுபவம் ஒரே குதூகலமாகத்தான் இருந்தது. அந்த ஆனந்தத்தைச் சொல்லிப் புரிய வைக்க முடியாது!. மேலே சென்றால் அங்கே மானஸா தேவி மூன்று தலைகளுடன் கூடிய காட்சி. அடுத்து சாமுண்டிகா சந்நிதி, காளியின் அம்சங்களாகத்தான் திகழ்ந்தன. மொழி புரியாத தால் விளக்கம் புரியவில்லை. கூட்டம் நிரம்பி வழிந்தது. மழைத் துணையுடன் இறங்கி ஒதுங்கிவிட்டு வெளியேறினோம். 7 மணி சுமாருக்கு கங்கையில் ஜோதி விடும் காட்சி காணச் சென்றோம். கங்கையின் கரையில் கங்காதேவி, ராதா கிருஷ்ணர், நாராயணன் என்று வரிசையாக ஏழெட்டு கோயில்கள் இருக்கின்றன. அத்தனை கோயில்களிலும் 7 மணி யளவில் தீபாராதனை காட்டிப் பின் கங்கைக்கும் காட்டுவார் கள். அதே நேரத்தில் மக்கள் வண்ணப் பூக்கள் நிறைந்த தொன்னையில் அகல் விளக்கு வைத்து எரியவிட்டு கங்கையில் ஜோதிவிடும் காட்சி நடைபெறும். மக்கள் கூட்டம் தோத்திரங் கள் சொல்லியும், பாட்டுக்கள் பாடியும் மகிழும் அந்த காட்சி கண்கொள்ளாக் காட்சிதான். கங்காதேவியோ மக்களுக்கும் மேலாக கும்மாளமிட்டு, ஜோதிகளை அணைத்துக்கொண்டு பேரிரைச்சல் போட்டு சுழன்று சுழன்று ஓடுவதைப் பார்க்க பாக்கியசாலிகளாகத் தான் இருக்க வேண்டும். பின்னிருந்த சிறிது நேரத்தைக் கடைவீதிகளில் கழித்துவிட்டு, விடுதிக்குச் சென்று சாப்பாட்டை முடித்துக்கொண்டு தூங்கினோம்.

அடுத்த நாளான வியாழன் காலை 4 மணிக்கு இமயமலை அடிவாரமான 11,000 அடி உயரத்தில் இருக்கும் பத்ரிகா ஆசிரமத்தை நோக்கி எங்கள் பயணம் தொடங்கியது. ஒரே மலைப் பாதைதான். இருட்டு விலகாததால் காட்சிகள் கண்ணுக்குப் புலப்படவில்லை. விடியும்வரை தூக்கக் கலக்கத்தில்தான் இருந்தோம். வெளிச்சம் வரவர ஒவ்வொருவராக விழிப்புப் பெற்றோம். 8 மணி அளவில் தேவப்பிரயாகை என்னும் அலகநந்தா, பாகீரதி நதிகள் சங்கமமாகும் இடத்தில் ஸ்நானம் செய்தோம். இந்தச் சங்கமத்திற்குப் பிறகுதான் கங்கையாகப் பாய்கிறாள். இங்கேயே சிற்றுண்டியை முடித்து விட்டுப் புறப்பட்டோம். பாதையில் அங்கங்கே சில கிராமங்கள் தென்பட்டன. இவற்றைக் கடந்து அலகநந்தா மந்தாகினி சங்கமமாகும் இடமான ருத்ரப்பிரவாகையில் மதிய உணவை முடித்துப் புறப்பட்டோம். பஸ் இன்னும் மேலே போக ஆரம்பித்தது. இந்தப் பாதை ஒரு பஸ் போக, மற்றொன்று வர வழி விடுமளவிற்கு மிகவும் குறுகலானது தான். உயர்ந்த மலைகள் சூழ்ந்த சுற்றுப்புறம். செல்லும் பாதைக்கு ஒருபுறம் உயர்ந்த மலை. மறுபுறம் ஆழ்ந்த பள்ளம். கரணம் தப்பினால் மரணம் என்ற மொழிக் கொப்ப இம்மி பிசகினாலும் அதோ கதிதான் என்றாலும், அந்த பத்ரி நாராயணன் நம்மைப் பத்திரமாகவே அழைத்துப் போகிறார் என்றுதான் சொல்லவேண்டும். முடிவில் சிறிது அச்சம் கொண்டுதான் சென்றேன். ஆனால் அந்த மலைப்பாதையில் பஸ் சுற்றிச் சுற்றி ஏற, ஏற மனம் இயற்கையை ரசிக்கத் தொடங்கி விட்டது. மலையும் பள்ளத்தாக்கும் மாறி, மாறி வர அதில் அலகநந்தா இறங்கி ஓட, பக்கத்தில் புல்வெளிகள், மரங்கள் அங்கங்கே ஓவியப் படங்களாகத் திகழ ஆண்டவன் சிருஷ்டியில் மனம் லயிக்க ஆரம்பித்துவிட்டது. ஆரம்பத்திற்கு முத்தாய்ப்பு வைத்ததுபோல் பீபிள் கோட்டில் நாங்கள் தங்கவேண்டியநேரம் வந்துவிட்டது. அங்கு விடுதியில் இரவு உணவை முடித்து படுக்கை விரித்தோம். இங்குதான் லேசாகக் குளிரின் ஆரம்பம். மறு நாட்காலை வெள்ளியன்று மறுபடியும் பயணம் தொடர்ந்தது. பஸ் மேலே செல்லச் செல்ல சில்லென்ற காற்றுடன் குளிரும் ஏறத் தொடங்கியது. மனம் திரும்ப

இயற்கை ரசனையில் ஆழ்ந்தது. பஸ்ஸில் பத்ரிநாராயண னின் பாடல்களும், எங்கள் அன்னையின் நாமாவளிகளும் மாறி மாறி கேசட்டுகள் இசைத்தன. கண்கள் இயற்கையை ரசிக்க, காதுகள் இசையில் லயிக்க, வாய் முறுக்கு, கடலை மிட்டாயைச் சுவைக்க, மனம் எந்தச் சிந்தனையும், சஞ்சலமும் இன்றி, செயலிழந்து அநுபவித்த அந்த அநுபவத்தை சொல்லிப் புரியவைக்க முடியாது. அச்சம் எங்கோ அகன்றது. இது ஒரு மறக்க முடியாத அநுபவம். இன்னும் 10 கிலோ மீட்டர் சென்றால் ஜோதிர்மடம் அடைவோம். ஆனால் அதற்குள் பத்ரிநாராயணன் எங்களை ஒரு சோதனைக்கு ஆளாக்கி அனுபவங்களுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்துவிட்டார். அவ் வப்போது பெய்த மழையின் காரணத்தால் ஒரு பெரிய பாறை சரிந்து சாலைக்குக் குறுக்கே த டை ய ா க இருந்து, பிரயாணத்தை நிறுத்தியது. எதிர்ப்புறமும் இதே மாதிரி சில பஸ்கள் நின்றுவிட்டன. ஆனால் பத்ரி செல்லும் பாதையில் யாத்ரீகர்களின் இன்னல்களைத் தவிர்க்க அங்கங்கே ராணுவ ஆட்கள் வேனில் வேண்டிய உபகரணங்களுடன் தயாராக இருந்துகொண்டு உதவுகிறார்கள். அந்தப் பாறையை அப் புறப்படுத்த கிட்டத்தட்ட ஒருமணி நேரம் ஆயிற்று. அந்த நேரத்தில் பஸ்ஸில் இருந்த அனைவரும் நாராயணனை ஸ்மரணை செய்துகொண்டும், இடை இடையே அவரவர் அனுபவங்களைச் சொல்லிக் கொண்டும் இருந்தனர். அந்த இடத்தில் மழைச் சகதியுடன் பாறையும் சரிந்ததில் தரை சீர் கெட்டு இருந்தது. அதனால் எல்லா பஸ்களில் இருந்த பிரயாணிகளும் பாதுகாப்பிற்காக இறங்கி நடந்து அந்த இடத்தைக் கடந்தோம். பின் பஸ் மெதுவாகக் கடந்து வந்து எங்களை ஏற்றிக்கொண்டு விரைந்தது. சற்று நேரத்தில் ஜோதிர்மடத்தை அடைந்தோம். அங்கு சங்கராச்சாரியார் ஸ்தாபித்த லட்சுமி நரசிம்மர் கோயில், வாசுதேவர் கோயில், அஷ்டபுஜ கணேசமூர்த்தி, துர்க்கை கோயில் யாவும் தரிசித்து விட்டு அடுத்து பாண்டுகேச்வரம் அடைந்தோம். இனி இங் கிருந்து ஒருவழிப் பாதை என்பதால் பஸ்களை நிறுத்தி குறிப் பிட்ட நேரத்தில் மேலே போவதற்கும், கீழே வருவதற்கும் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அதனால் நேரத்திற்குத்

தகுந்தவாறு கிரமமாக பஸ்கள் போகின்றன. அதன்படி நாங்கள் புறப்பட்டு வியாழன் காலை 11-30 மணி அளவில் பத்ரியை அடைந்தோம். அங்கும் மழைதான் வரவேற்றது. விடுதியில் மூட்டை முடிச்சுகளை வைத்துவிட்டு யாவரும் முதலில் தப்த குண்டத்தில் குளித்தோம். என்ன விந்தை என்றால் அலகநந்தா பக்கத்தில் பெரிதாக ஓடிக்கொண்டிருக்க, பூமியோ பனிக்கட்டி மாதிரி குளிர, இந்த குண்டத்தில் தண்ணீர் அடுப்பில் கொதிப்பதுபோல் புகையுடன் சுட்டுக் கொண்டிருப்பதுதான். எங்கே உடம்பில் பட்டாலும் சுட்டு விடுமோ என்றுகூட எண்ணத் தோன்றுகிறது. அதில் கந்தகம் கலந்து இருப்பதால் வாயில் நீர்போகாமலும், அதிக நேரம் ஸ்நானம் செய்ய வேண்டாமென்றும் முதலிலேயே எச்சரித்து விட்டார்கள். அந்த நீர் அங்கு இருந்த குளிருக்கு இதமாகவே இருந்தது. இரண்டு நிமிடங்களில் எல்லோரும் ஸ்நானம் முடித்துக்கொண்டு அடுத்துச் செல்லவேண்டிய ப்ரம்மகபாலம் என்ற அந்த மண்டபம் சென்றோம். இது பித்ருக்களுக்கு பிண்டம் வைக்கும் இடம். அதனால் எல்லோரும் அங்கு பிண்டம் வைத்து தர்ப்பணம் செய்தார்கள். கோயில் பிரசாதத்தையே இங்கு பிண்டம் வைக்க சாதமாகக் கொடுக்கிறார்கள். இங்கு தாயாருக்கும், கயாவில் தந்தைக்கும் செய்து விட்டால் திவசம் என்பதை வருடாவருடம்செய்யவேண்டியதில்லை என்பது ஐதீகமாம். ப்ரம்மகபாலம் என்பதன் சிறு கதை என்னவென்றால், சிவபெருமான் கோபா வேஷத்தில் ஒருசமயம் ப்ரம்மதேவனின்ஐந்தாம் தலையைக்கொய்தாராம். அந்தக் கபாலம் எத்தனை உதறியும் கீழே விழாது கைகளில் நன்றாக ஒட்டிக்கொண்டதாம். உடனே சிவபெருமான் உலகம் முழுவதும் சுற்றிவிட்டு பத்ரிநாத் வந்து தம்மை காத் தருளும்படி நாராயணனை நோக்கி மன்றாடிப் பிரார்த்திக்க பகவானின் கருணை அவர்மீதுவிழ, அடுத்த கணம் சிரம் அவர் கையை விட்டு நழுவியதாம். இங்கு செய்யப்படும் பிண்டதானம் பலனுள்ளதென்றும் பிரதானமானதாகவும் கருதுகிறார்கள். இங்கு காரியங்களை முடிக்க 30 நிமிடங்களுக்கு மேல் ஆகி விட்டது. அங்கு குளிர் பனிக்கட்டிமேல் நிற்பதுபோல் கால்களில் உறைத்துக்கொண்டிருந்தது. நேரம் ஆகஆக அந்த

உறைப்பு தலைவரை எட்டியது. சிலபேர் வெறும் தரையில் நிற்காமல் கிடைத்த சாதனங்களை வைத்து நின்றனர். நான் தரையிலேயே நின்றதால் இறுதியில் கண்கள் செருகி மயக்கம் வருவது போன்ற ஒரு நிலை எய்தியது. அதைச் சொன்னதும் அருகிலிருந்த அங்கத்தினர் என் கைகளைப் பலமாகப் பிடித்துத் தரதரவென்று வேகமாகக் கூட்டி வந்து விடுதியில் சேர்த்தார். சிறிது நேரத்தில் சரியாகிவிட்டது என்றாலும் குளிர் மட்டும் தாங்கமுடியாத அளவுதான். நேரமாகிவிட்டதால் கோயில் சாத்திவிட்டார்கள். அதனால் எல்லோரும் சாப்பிட்டு விடுதியில் ஓய்வு பெற்றோம். 2 மணி அளவில் சில பேர் மட்டும் அங்கிருந்து சிறிதே தொலைவிலுள்ள மானா கிராமம், வியாசர் குகை எல்லாம் பார்க்கச் சென்றனர். மானா கிராமம் என்பது இந்தியா சீனாவிற்கு எல்லைக் கோடாக நிற்கும் ஓர் இடம். இங்கு ராணுவம் முகாமிட்டிருக்கிறது. இதில் அருகில் இருக்கும் நதி சரஸ்வதி. இதன் மேல் இருக்கும் பாலம் பீமன் பாலம். கேசவப் பிரயாகை என்ற சங்கம இடமும் உள்ளது. வியாசர் குகையில் கணேசர் கோயில் இருக்கிறது. இங்குதான் வியாசர் பாகவதம் சொன்ன இடம். இங்கு ஓலைகள் அடுக்கிவைத்தாற் போன்ற கல் அமைப்புகள் உள்ளன.

பின்பு எல்லோரும் 4 மணி அளவில் கோயிலுக்குச் சென்றோம். படிகள் ஏறித்தான் செல்லவேண்டும். கோபுர வாசலில் பெரிய கண்டாமணி இருக்கிறது. கிழக்குப் பார்த்த கோபுர வாயில். திருச்சந்நிதியும் கிழக்கு நோக்கி இருக்கிறது. முன் மண்டபத்தில் கருடபகவான் சுவாமியை நோக்கியிருக்கிறார். துவார பாலகர்களும் இருக்கின்றனர். இனி கோயிலைச் சுற்றி வலம் வரும்போது கிழக்குப் பிரகார மதில் சுவரில் ப்ரம்மா, விஷ்ணு, சிவன் அடுத்து ஆஞ்சநேயர் இருக்கிறார்கள். அதற்குப் பின் கணபதி. தென் பிரகாரத்தில் வடக்கு நோக்கி மகாலட்சுமி சந்நிதி, சுயம்பு மூர்த்தி. அதற்கு அடுத்து திண்ணையுடன் கூடிய சிறு மண்டபம். அங்கு கஜானா பெட்டியுடன் ஒருவர் அமர்ந்திருக்கிறார். கோயிலில் செய்யும் அர்ச்சனை, சஹஸ்ரநாமம் எதுவாக இருந்தாலும் அவரிடம்

பணம் கொடுத்து ரசீது பெறவேண்டும். இந்த மண்டபத்தில் ஆதி சங்கரரின் சிலை இருக்கிறது. காஞ்சிப் பெரியவர் படம் ஒன்று காட்சி தருகிறது. இந்த சந்நிதிக்கு எதிரே கருவரைச் சுவரையொட்டி ஒரு நந்தி வடமேற்கு மூலையில் சஞ்சீவி மலை யுடன் பெரிய சலவைக்கல் ஆஞ்சநேயர். அங்கு உள்ள அடுத்த மண்டபத்தில் பஜனைப்பாடல்கள் பாடும் தாழ்வாரம். அடுத்து க்ஷேத்திரபாலரும், கிழக்குப் பிராகாரத்தில் சூரிய நாராயண மூர்த்தி. இந்தச் சுற்றை முடித்துவிட்டு கருவறைக்குச் செல்ல வேண்டும். இலந்தை மரம்தான் ஸ்தலவிருட்சம். இதற்கு இரண்டு வழிகள். கிழக்குப் புறமும் செல்லலாம். தெற்குப் புறமும் செல்லலாம். மாலையில் கிழக்குப் பக்கம் சென்று ரூ. 151-00ஐக் கட்டி ஸஹஸ்ர நாம பூஜையும் நிர்மால்ய சேவையும் தரிசனம் கிட்டியது. அடுத்த நாள் காலை 6 மணிக்கு அபிஷேகம் பார்க்க தெற்குப் பிரகாரத்தில் க்யூவில் நின்று அர்த்தமண்டபத்திற்குள் சென்றோம். அபிஷேகத்திற்கு ரூ. 1000-கட்டினால் நால்வர் அனுமதி. அதன்படி பணம் கட்டியவர்கள் உள்ளே சென்றோம். அர்த்த மண்டபம் 20,30 பேர் உட்காரக்கூடிய சிறிய இடம்தான். அவ்வளவுதான் அனுமதிக்கிறார்கள். கருவறைக்குமுன் இருபுறமும் திண்ணை கள் இருக்கின்றன. வலப்புறம் 4, 5 பண்டாக்கள் ஸஹஸ்ர நாமம் சொல்ல, இடப்புறத் திண்ணையில் ஒருவர் ஒலிபெருக்கி யில் நேர்முக வர்ணனை செய்ய அபிஷேகங்கள் நடக்கின்றன. உத்தரத்தில் ஆலய மணிகள் இருக்கின்றன. இங்குள்ள நம்பூதிரி அர்ச்சகர்களுக்கு ராவல்ஜி என்று பெயர். இவர் பஞ்சகச்சம் கட்டி, கருப்புக் கோட்டு அணிந்து, தலையில் காவி நிற தலைப்பாகை அணிந்திருக்கிறார். இவர் அபிஷேகம் செய்யும்போது உதவிக்கு ஒருவர் மட்டும் இருக்கிறார். அங்கு செய்த முறை அங்குள்ள அத்தனைபேரும் சிரமமில்லாது பார்க்கும்படி இருந்தது. யாரும் குறுக்கே இப்படி, அப்படி நடந்து மறைப்பதில்லை. பணம் கட்டிய அத்தனை பேரிடமும் கிரமமாக சங்கல்பம் மந்திரங்கள் ஓதி செய்கிறார்கள். அபிஷேகம் ஆரம்பிக்குமுன் ராவல்ஜி அங்கிருக்கும் தெய்வங் களைக் காட்ட ஒலிபெருக்கியில் வர்ணனையாளர் குபேரன், கருடன், கணேசர், நரன், நாராயணன், நாரதர், உத்தவர்,

பத்ரிவிசால் என்று உரைத்து விளக்குகிறார். உதவியாளர் ஒவ்வொன்றும் எடுத்துக் கொடுக்க அவர் அபிஷேகம் செய்கிறார். உடனுக்குடன் அந்த பால், தேன், எண்ணெய், வாசனைத் திரவியம் யாவற்றையும் நமக்கும் பிரசாதமாகக் கொடுத்து விடுகிறார்கள். இது முடிந்து அலங்காரம் செய்யும் போதும் திரைபோட்டு மறைப்பதில்லை. பத்மாசனத்தில் சிறு குழந்தை மாதிரி உட்கார்ந்திருக்கும் பத்ரி நாராயணனுக்கு அலங்காரம்தான் அதிகம். வைரம், பச்சைக் கற்கள் பதித்த தங்கத் தகட்டினாலான கேடயம் போன்ற கிரீடம் தலையை அழகுபடுத்துகிறது. ஆபரணம், சந்தனம், புஷ்பம் என்று மூர்த்தியையே மறைக்கும்படியான அலங்காரங்கள். ஒவ்வொன்றையும் நமக்குக் காட்டிக் காட்டிச் செய்கிறார்கள். இவையெல்லாம் என்னைக் கவர்ந்து கண்ணைவிட்டு அகலாத ஒரு காட்சி என்றுதான் சொல்லவேண்டும். இறுதியில் வலைத் துணியில் கட்டிய துளசிப் பிரசாதமும் கொடுக்கிறார்கள். தவிர இங்கு குபேரன் பாதத்தில் ரூபாய் நாணயங்களை புதுவஸ்திரத்தில் கட்டி வைத்து வாங்கிக் கொள்வது என்ற ஐதிகப்படி அதையும் பெற்றோம். இங்கு குளிர் எனக்குத் தாங்காத நிலையில் திறந்த வெளியில் நிற்கமுடியவில்லை. அதனால் என் கணவர் கையைப் பிடித்துக்கொண்டு வேகமாக விடுதிக்கு வந்து சேர்ந்தோம். மற்றவர்கள் அந்த ராவல்ஜியின் வீட்டிற்குச் சென்று பஜனைபாடி, ஆசியும், பிரசாதமும் பெற்று வந்தனர். விடுதியில் மதிய சாப்பாடு முடித்துக் கொண்டு 1–30 மணி அளவில் புறப்பட்டு வழியில் நின்ற ஆஞ்சனேயருக்குக் கும்பிடுபோட்டு 5–30 மணி அளவில் ஜோதிர்மடம் வந்து சேர்ந்தோம்.

இங்கு சங்கருக்கு ஞான ஒளி ஏற்பட்ட இடம் என்பதால் ஜோதிர்மடம் என்று பெயர் வந்ததாகச் சொல்லுகிறார்கள். அவர் தவம் செய்த குகை, கற்பக விருட்சம், அங்கு நிறுவப்பட்ட சங்கரமடம் எல்லாம் தரிசித்தோம். அந்த மடத்தில் சிறிது நேரம் பஜனை செய்தோம். இங்கிருந்து புறப்பட்டு 8–30 மணி இரவில் பிபல்கோட் வந்தடைந்தோம். இங்கு இரவு தங்கி காலை 4 மணிக்கு புறப்பட்டுக் கர்ணப் பிரயாகை

வழியாக ருத்ரப் பிரயாகை வந்து சேர்ந்தோம். இது மந்தாகினி, அலகநந்தா சங்கமமாகும் இடம். யாவரும் ஸ்நானம் செய்தோம். ஆவணி அவிட்டத்தை முன்னிட்டு ஆண்கள் பூணூல் போட்டு, காயத்ரி செய்தார்கள். அங்கு காலை ஆகாரம் முடித்துக்கொண்டு 10–30 மணிக்குப் புறப் பட்டு 3 மணிக்கு ராம்பூர் வந்து சேர்ந்தோம். நேரம் ஆக ஆக இங்கேயே குளிர ஆரம்பித்தது. ரசாய் கொடுத்தார்கள் போர்த்திக்கொள்ள. இரவு அங்கு ஒய்வு பெற்று மறு நாட் காலை 6 மணிக்குப் புறப்பட்டு 12,500 அடி உயரத்தில் இருக் கும் கேதார் நாத்திற்கு அடியெடுத்து வைத்தோம். கௌரி குண்டம் வரை எல்லோரும் சேர்ந்தே போனோம். அங்கிருந்து தான் மலைப்பாதையில் தனியாகப் பிரிந்து செல்லவேண்டிய இடம். பஸ், கார் எதுவும் போக முடியாத குறுகலான பாதை. தூரம் குறைவுதான் என்றாலும் பாதை கரடு முரடானது. கல், மண், சகதி, மேடு, பள்ளம் என்ற நிலை. ஒரு புறம் மலை. மற்றொரு புறம் இயற்கைக் காட்சி அழகுடன் ஓடும் நதியுடன் சேர்ந்த கிடு, கிடு பள்ளம். தவறினால் எலும்புகூட கிடைக் காது. இங்கு குச்சி ஊன்றித்தான் நடக்கமுடியும். குளிர் அதிகம் என்பதால் எல்லோரும் தலைமுதல் கால்வரை குல்லாய், பனியன்கள், கையுறை மேஜோடு, 'ஷூ' ஆகிய எல்லாவற் றையும் அணிந்து பற்றாக்குறைக்கு மழைக்கோட்டு குல்லாய், வேறு. இத்யாதிகளுடன் அவரவர் விருப்பப்படி குதிரையிலும், டோலியிலும் ஏறினோம். நடக்க முடியாதவர்களுக்கு இப்படி ஒரு வசதி உண்டு. குதிரையில் வருவோருக்கு ஒரு குதிரைக் காரன் துணை வருகிறான். டோலிக்காரர்களை 4 பேர் தூக் கிச் செல்கிறார்கள். டோலி என்பது ஒரு சின்ன நாற்காலி இரண்டு நீளக் குச்சிகளில் கட்டியிருக்கும். மிகவும் வசதிக் குறைவான நாற்காலிதான். சற்று பருத்தவர்கள் அதில் போவது கடினம்தான் என்றாலும் அந்த கேதாரீஸ்வரரைப் பார்க்க ஆவலுடன் போகத்தான் போகிறார்கள். சிலர் ஒற்றை நாற்காலியில் மூட்டை முடிச்சுகள், சிறு குழந்தைகளை முதுகில் சுமந்து செல்கிறார்கள். இப்படிப் பலவிதமான காட்சிகளுடன் வேடிக்கை பார்த்துக் கொண்டே ஏறத் தொடங்கினோம். குதிரை எப்படியென்றால் பழக்க தோஷத்தில் செய்வதுபோல்

அதில் ஏறினால் அது தன் வழியே நடந்து நேராக மேலே போய்விடுகிறது. டோலி தூக்குபவர்கள் நால்வரும் ராணுவ நடைபோட்டு ஒரே சீராக நடக்கும் நடையே ஒரு அழகு. இயற்கைச் சூழலுடன் மந்தாகினி ஓட்டத்தையும், செயற்கை யாக மனிதர்கள் போட்டுக்கொண்டு செல்லும் விதமும் வேஷமும் பார்த்துக்கொண்டும் பலவித ரசனைகளுடன் மனதில் அந்த ஈஸ்வரனை ஜபித்துக்கொண்டு ஏறும் அந்த இன்பமான நிலை கிட்ட மிகவும் கொடுத்து வைத்திருக்கவேண்டும். தனிமையும் தோன்றவில்லை. ஒருவர் நடந்து ஏறுவதே சிரமமான நிலை என்ற அந்தப் பாதையில் நம்மையும் சுமந்து நால்வர் ஏறுவது பரிதாபமான நிலைதான். அவர்கள் அவ்வப்போது நம்மை இறக்கி வைத்துவிட்டு தேநீர்க்கடைகளில் சிற்றுண்டி, தேநீர் சாப்பிட்டு இளைப்பாறுகிறார்கள். இப்படிச் செங்குத்தான முரட்டுப் பாதையில் கௌரிகுண்டத்தில் இருந்து 8-30 மணிக்குப் புறப்பட்ட நாங்கள் சுமார் 3 மணிஅளவில் கேதார்நாத் அடைந்தோம். டோலியில் செல்பவர்கள் இறுதிவரை சென்று கோயிலை அடையலாம். ஆனால் குதிரைக்காரர்கள் ஒரு பர்லாங் தூரம் நடக்கவேண்டும். இறுதி வரை குதிரைகளுக்கு அனுமதியில்லை. மேலே போகப் போக குளிர் நடுக்கமும் அதிகரித்தது. வழியில் சிறு மழைத்துளி வந்த போதிலும் யாரையும் எதுவும் பாதிக்கவில்லை. எங்களுடன் வந்த ஒருவருக்கு ஏற்பட்ட சோதனை மலைபோல் வந்து பனி போல் நீங்கியது. நாங்கள் சென்ற சமயம் 3 மணியாக இருந்ததால் யாவரும் விடுதியில் குளிர்நடுக்கத்தால் ரஜாய்களுடன் முடங்கிவிட்டோம். 4 மணிக்குப் பின் எழுந்து யாவரும் கோயிலுக்குச் சென்று கேதாரீஸ்வரரின் அலங்கார தரிசனம் செய்தோம். பாரதத்தில் இருக்கும் துவா தசலிங்க க்ஷேத்ரம் என்ற 12 ஜோதிலிங்கங்கங்களில் இதுவும் ஒன்று. சுயம்பு மூர்த்தி. சிறு குன்று போல் கற்பாறை வடிவில் சுவாமி அங்கு நித்திய வாசம் செய்கிறார். நர, நாராயணர் பத்ரியில் மண் சிவலிங்கம் செய்து வெகு காலம் ஆராதித்தார்களாம். ஈஸ்வரன், பக்தியை மெச்சி, என்ன வரம் வேண்டுமென்று கேட்டாராம். அப்போது அவர்கள் கேதாரத்தில் ஜோதி வடிவில் எழுந்தருளியிருக்க வேண்டுமென்றும், மனித குலம் தரிசித்து உய்யவேண்டும்

என்றும் பிரார்த்தித்தார்களாம். அதன்படி ஈஸ்வரன் இங்கு ஜோதிர்லிங்க வடிவில் தங்கிவிட்டார் என்று வரலாறு. இந்த லிங்கம் மற்ற லிங்கங்களுக்கும் சற்று வித்தியாசமானதுதான். கவனித்து நோக்கினால் எருமைக் கடாவின் பின்புறம் போன்று பாறை வடிவம் இருக்கும். இதற்கும் ஒரு வரலாறு உண்டு.

பாரதப் போர் முடிந்து பஞ்ச பாண்டவர்கள், மன சாந்திக் காகவும், ஓய்வு பெறவும் இப்பகுதிக்கு வந்தார்களாம். அவர் களைக் கண்ட சிவபெருமான் எருமை வடிவம் பெற்று ஓட, அதனிடம் தெய்வீக அம்சம் ஒளிர்வதைக் கண்ட பஞ்ச பாண்ட வர்கள் அதைத் துரத்திப் பிடிக்க, சிவபெருமான் பூமிக்குள் சென்று மறைந்துவிட எண்ணி பூமிக்குள் போக, பீமசேனன் பின்பக்க வாலைப் பிடித்து இழுத்தாராம். அப்போது வால் பகுதி இங்கு தங்கிவிட்டதாக ஐதீகம்.

மாலை கோயிலில் அலங்கார தரிசனம் செய்து, கோயிலின் இடப்புறம் பாரதி பாடிய வெள்ளிப் பனிமலைகளைப் பார்த் தோம். சங்கரர் சிலை, சிவலிங்கம், அவர் ஐக்கியமான இடம் எல்லாம் கண்டு களித்தோம். விடுதிக்குச் சென்று குளிர் நடுக்கத் துடன் முடங்கினோம். மறுநாள் காலை எழுந்து ஞான பூமிஎன்ப தால் ஸ்நானம் இல்லாமல் முகம் மட்டும் கழுவிக்கொண்டு கோயி லுக்குப் போனோம். அவரவர் கையால் ஈஸ்வரனுக்கு நெய், தேன், திருநீறு ஆகியவைகளால் அபிஷேகம் செய்தோம். பணம் கட்டினால் நமக்கே அந்த உரிமையைத் தருகிறார்கள். அதன் படி பகவானிடம் வேண்டிக்கொண்டு புறப்பட்டோம். காலை 8-30 மணி சுமாருக்கு டோலியில் அமர்ந்த நாங்கள் 11-30, 12 மணியளவில் கௌரி குண்டத்தை அடைந்துவிட்டோம். ஏறும் போது இருக்கும் சிரமம் இறங்கும்போது இல்லை என்பதால் வேகமாக வருகிறார்கள். நாங்கள் வழியில் பல டோலிகள், குதிரைகள், நடை யாத்ரீகர்கள் என்று பலவித வேடிக்கைகளை பார்த்து களிப்புடன் இறங்கினோம். கௌரி குண்டத்தில் வெந்நீர் ஸ்நானம் செய்துவிட்டுப் புறப்பட்டு த்ரியுகி நாராயணன் என்ற இடம் வந்து சேர்ந்தோம். இங்கு பார்வதி-பரமேசுவரன் மணம் செய்த ஸ்தலமாம். இங்கு

இருந்த ப்ரம்ம குண்டம், விஷ்ணு குண்டம், ருத்ர குண்டம், சரஸ்வதி ஆகிய குளங்களில் உள்ள நீரை அவரவர் மேல் புரோட்சித்து தெளித்துக்கொண்டோம். மூன்று யுகங்களாக எரிந்துகொண்டிருக்கும் ஓமகுண்டம் இருந்தது. அது நீடித்து வளர்ந்துகொண்டிருக்கவோ, ஐதீகமோ என்னவென்று தெரிய வில்லை. வரும் யாத்ரீகர்கள் விறகு வாங்கி சமர்ப்பிப்பார்க ளென்று நாங்களும் அதைச் செய்தோம். நர, நாராயணன், க்ஷேத்ரபாலர் ஆகியவரைத் தரிசித்தோம். ஈஸ்வரன் மணம் புரிந்த இடம் என்பதால், இங்கு சௌபாக்கிய பூஜை, சுமங்கலி களுக்கு விசேஷம் என்றார்கள். அதன்படி தம்பதி சகிதம் ரவிக் கைத் துண்டு வைத்து பூஜை செய்து எடுத்துக்கொண்டோம். அதைவைத்துவிட்டும்வரலாம். அந்தபூஜையில்வைத்தவஸ்திரங் களை கல்யாணமாகாத கன்னிப் பெண்கள் வாங்கி அணிந்தால் விரைவில் கல்யாணம் கூடும் என்று சொன்னார்கள். அதற்காக தேவையானவர்கள் வாங்கிக்கொண்டோம். அந்தக் கோயிலின் வெளிப்புறம் இருந்த தொந்தியில்லாத வித்தியாசமாக நின்ற கோலத்திலிருந்த பிள்ளையாரைத் தரிசித்துவிட்டுப் புறப்பட்டு ராம்பூரில் தங்கி ஓய்வுபெற்றோம். மறுநாள் காலை புறப்பட்டு குப்தகாசியை அடைந்தோம். இந்த இடங்களும் மலைப் பாதையில்தான் என்றாலும் சற்று தாழ்வான இடங்கள். இயற்கை வளம் நிறைந்ததாகச் சொல்ல முடியாது. பள்ளத் தாக்குகள் எல்லாம் வறண்டு இருக்கின்றன. அடுத்து குப்த காசி என்ற இடம். குப்த என்றால் இரகசியம்; காசி என்றால் பரம்பொருள். பரம்பொருளின் இரகசியத்தை உணர்த்திய இடம் என்பதால் இப்பெயராம். இங்கு காசி விசுவநாதர், அர்த்தநாரீசுவரர் ஆகியவர்களைத் தரிசித்தோம். இங்கு ஒரு தண்ணீர் இல்லாத தெப்பக்குளம்; அதில் ஒருபக்கம் பசு மாட்டின் வாயிலிருந்தும், மற்றொரு பக்கம் யானை வாயிலிருந் தும் நீர் கொட்டிக்கொண்டிருக்கிறது. இது கங்கை, யமுனை கொட்டுவதாகச் சொல்கிறார்கள். எங்கிருந்து எப்படி வருகிற தென்பது புதிராம். இதில் ஸ்நானம் செய்துவிட்டு சங்கல்பம் செய்தோம். அடுத்ததாக சப்தரிஷி ஆசிரமம் சென்றோம். இங்கு ரிஷிகள் எல்லாருக்கும் சிலா வடிவங்களுடன் தனித்தனி மண்டபங்கள் அமைத்துள்ளனர். இங்கு இந்திய ஜனாதிபதி

ஆரம்பித்த ஓமகுண்டம் 108 வருடங்கள் அணையாமல் இருக்கும்படி அமைத்திருப்பதையும் கண்டோம்.

பின் ரிஷிகேசத்தில் சிவானந்த ஆசிரமம் சென்றோம். உள்ளே நுழையும்போதே அங்கிருந்த தூய்மையும், அமைதியும் சுவற்றில் எழுதி வைக்கப்பட்டிருந்த வாசகங்களும் தெய்வீகத் தன்மை பெற்றதாகவும், நம்மை இருட்டிலிருந்து ஒரு ஒளிக்கு அழைத்துப் போவது போலும் இருக்கிறது. அங்கு காட்சி கொடுத்த லிங்கம், கிருஷ்ணன், சங்கரர் ஆகிய சிலா உருவங்களைத் தரிசித்தோம். சிறிது நாம சங்கீர்த்தனம் செய்து விட்டு அடுத்த இடத்திற்குப் புறப்பட்டோம். அந்த இடம் ஸ்வர்க்க லோகமா, பூலோகமா என்று வியக்கும்படி இருந்தது. உள்ளத்தைக் கொள்ளை கொள்வதுபோல் அழகும் கண்ணைக் கவரும் வர்ண ஜாலங்களுடன்கூடிய கண்ணாடியால், உருவாக்கப்பட்ட சிலைகளான ஹனுமான், கணேசர், சிவபெருமான். கீதா ரதம், காளி ரூபங்கள் என்ற எண்ணற்ற உருவங்களின் ஒளிமயமான விளக்குகளின் வெளிச்சத்தில் ஜகஜ்ஜோதியாக விளங்கியதும்தான். என்னால் அந்த வர்ணனையை எழுத இயலாது. இதை முடித்து பழையபடி ஹரித்வாருக்கே வந்து சேர்ந்தோம்.

மறுநாட்காலை தக்ஷன் யாகம் செய்த இடமான கண்கல் போனோம். இங்கு தேவி பல ரூபங்களில் காட்சி. சிவன் தாக்ஷாயணியை தலையில் சுமந்து ஆடுவதுபோல் ஒரு பளிங்குச் சிலை உள்ளது. தக்ஷன் நடத்திய யக்ஞம்போல்ஓமகுண்டம்தொடர்ந்து கொண்டிருக்கிறது. இதைப் பார்த்தவுடன் ஹரித்வாரில் மாலை 6 மணிக்கு கங்கையில் எல்லோரும் பெரிய ஜோதியை விட்டுவிட்டு, மறுபடியும் இந்த காட்சிகள் எப்போது கிட்டுமோ என்று எண்ணிக்கொண்டு பிரியாவிடை பெற்றோம். இரவு 9 மணிக்குப் புறப்பட்டு காலை 4 மணிக்கு டில்லியை அடைந்தோம். காலை 9 மணிக்கு பாலிகா பஜார் என்று சொல்லும் பாதாளக் கடைகளுக்கு சென்றோம். இந்த இடம் 4 வழிகள் கொண்ட வட்ட அமைப்புடன் இருக்கிறது. ஆயத்த ஆடைகள், ஆடம்பரக் கைப்பைகள், விதவிதமான செருப்புகள் என்று

இப்படிப் பலப்பல பொருட்கள் நிரம்பியிருந்தன. அவரவர் தேவைகளைப் பூர்த்தி செய்து கொண்டு திரும்பினோம். மாலை 4 மணிக்கு ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்திற்குச் சென்று தலைவர் கோகுலானந்தர் என்ற ஸ்வாமிஜியுடன் உரையாடி விட்டுப் பிரசாதங்கள் பெற்றுக்கொண்டோம். பிறகு ஸ்ரீ ராம கிருஷ்ண பக்தரான மல்லிக் என்பவர் எங்களையெல்லாம் அவர் வீட்டிற்கு அழைத்துச் சென்றார். அதை மாளிகை என்றே சொல்லலாம். சிற்ப வேலைப்பாடுகள் நிறைந்த பொருட்களுடனும், தூய்மையாகவும், அழகாகவும் வைத் திருந்தனர். வசதிக்கும் வரம்பு இல்லை. முன்பின் தெரியாத எங்களை அந்தத் தம்பதியர் வரவேற்று தேநீர், சிற்றுண்டி கொடுத்து அன்புடன் உபசரித்தது, அவர்கள் குருதேவரின் சிஷ்யர்கள் என்பதற்கு எடுத்துக்காட்டாக இருந்தது. ஸ்வாமி அறை வீட்டின்கீழ்புறம் தனியாக இருந்தது. அங்கு சிறிது நேரம் நாம ஸ்மரணை செய்துவிட்டு விடை பெற்றோம். மாலை 6 மணிக்கு மலாய் மந்திர் என்ற முருகன் கோயில் அடைந்தோம். அங்கு சிவன், காளி எல்லாம் தரிசித்தோம் மறுநாட் காலை 9-30 மணி சுமார் புறப்பட்டு குதுப்மினார், காந்தி சமாதி, கோட்டை, பஹாய் இல்லம் என்ற விரிந்த தாமரைபோல் எழுப்பப்பட்ட தியான மண்டபம், நம் பிரதமர் இருந்த இடமான அவர் வாழ்க்கையை விளக்கும் தீன் மூர்த்தி பவன் எல்லாம் கண்டு களித்தோம். அடுத்து பிர்லா மந்திரில் நுழைந்தோம். அங்கு கொள்ளை கொள்ளும் அழகு நிறைந்த சலவைக்கல் கண்ணன் சிலை எல்லோரையும் மிகவும் கவர்ந்தது. என்றும் பார்த்துக்கொண்டே இருக்கும்படியான தோற்றம். இதற்கே இப்படியென்றால் பகவான் கண்ணனைப் பிரத்யட்சமாகப் பார்த்தால் எந்த நிலையில் இருப்போம் என்று மனம் எண்ணத் தொடங்கியது. இங்கு காட்சிகளை முடித்த பின் விடுதிக்குச் சென்றோம். இன்று ஸ்ரீ கிருஷ்ண ஜயந்தி என்பதையொட்டி தெருவில் வேஷதாரிகள் கொண்ட ஊர் வலங்கள் சாரிசாரியாகப் போய்க்கொண்டிருந்த வேடிக்கை களை விடுதியிலிருந்து கண்டு களித்தோம்.

2

அடுத்த நாட்காலை 2 மணிக்குப் புறப்பட்டு 7 மணிக்கு பிருந்தாவனம் வந்தடைந்தோம். அங்கிருந்து விடுதியில் தங்கி முதலில் மதுராவிற்குச் சென்றோம். மதுராவில் கண்ணன் பிறந்த இடம், கண்ணனின் வரலாறுகள் நிறைந்த சித்திரங்கள் யாவும் பார்த்தோம். பின் கோகுலத்திற்குச் சென்று பூதகி சம்ஹாரம், மேலும் கண்ணனின் சம்பவங்கள் நிறைந்த சில காட்சிகள். இங்கு தொட்டிலில் ஆட்டிவிடுவதுபோல் கண்ணன் வீற்றிருக்க, வரும் யாத்ரீகர்கள் அவ்வளவு பேரும் ஆட்டிவிட்டு வருகின்றனர். தொடர்ந்து கோவர்த்தன் சென்றோம். கோவர்த்தன மலையைத் தாங்கி கண்ணன் நிற்பார் என்று நினைத்துப்போக, அதற்கு மாறாக 2 தூண்கள் உயரமாகவும், குட்டையாகவும் நின்று காட்சி அளித்தது. இதை முடித்தபின் பிருந்தாவனத்தில் விடுதிக்கு வந்துவிட்டு மாலை ஒரு கோயிலுக்குச் சென்றோம். சற்று தூரத்திலிருந்தே கண்ணுக்குத் தெரிந்த கோபுரமும், காதில் ஒலித்த நாதஸ்வர இசையும் எல்லோரையும் சொந்த ஊருக்குத் திரும்பிய ஒரு மகிழ்ச்சியையும், உற்சாகத்தையும் ஏற்படுத்தியது. ஆம். அது ஒரு பெருமாள் கோயில், அங்கு ரங்கமன்னார், ஆண்டாள், ஆழ்வார்கள் எல்லாம் வீற்றிருந்தனர். பவித்திர உற்சவம் என்று விசேஷங்கள் நடந்துகொண்டிருந்தன. பிரசாதங்களைப் பெற்றுக்கொண்டு வெளியேறினோம்.

மறுநாட்காலை ஆக்ராவிற்குச் சென்றோம்.அங்கு தாஜ்மகாலைப் பார்த்தோம். பார்க்கப் பார்க்கத் தெவிட்டாத வேலைப்பாடுகளும் அழகும் சொல்லிலடங்காது. கணவன்,மனைவிக்காக இப்படி ஒரு விலை மதிப்பற்ற மாளிகையை எழுப்பியதைப் பார்க்க, அதை உலக அதிசயங்களில் ஒன்று என்று சொல்வதில் தவறே இல்லை. ஆச்சரியம்தான் இருந்தது. அங்குள்ள ஷாஜஹான், மும்தாஜ் இருவரின் சமாதிகளையும் பார்த்துவிட்டு பிருந்தாவனம் திரும்பினோம். மாலை அங்குள்ள கோயிலுக்குச் சென்றோம். பிருந்தாவனம் என்று துளஸிச் செடிகள் மண்டிக் கிடக்கின்றன. வானரக் கூட்டமாக குரங்குகள் ஏராளம். நம் கையில் ஏதாவது வைத்திருந்தால் பலவந்தமாகப் பிடுங்குகின்றன. மிக ஜாக்கிரதையாகச் செல்ல

வேண்டும். இதையெல்லாம் கடந்து உள்ளே போக ஹரிதாஸ் ஸ்வாமிகள் சமாதி காட்சி அளிக்கிறது. இந்த பிருந்தாவனத் தில்தான் கண்ணன் கோபிகளுடன் சல்லாபம் செய்த இடம் என்று சொல்கிறார்கள். இரவு 7 மணிக்கு மேல் அத்தனை குரங்குகளும் ராதைகளாக மாறி கண்ணனுடன் விளையாடுவ தாக ஐதீகமாம். இதைச் சோதிக்க இருவர் அங்கு தங்கியபோது உயிர் நீத்ததாகச் சொன்னார்கள். அதனால் இங்கு யாவரும் இருட்டுவதற்குள் போய் வந்துவிட வேண்டும். இதை அடுத்து கண்ணன் ராஸக்ரீடை செய்த கோயில் ஒன்றையும் பார்த் தோம். கிருஷ்ண ஜெயந்தியை முன்னிட்டு கூட்டம் நிரம்பி வழிந்தது. வர்ண வர்ணப் பொடிகளைத் தூவிக்கொண்டு ஒரே கும்மாளமடித்துக் கொண்டிருந்தனர். இங்கு லட்சுமி நாராயணன், கண்ணன் ஆகியவர்களைத் தரிசித்தோம். பின்னர் விடுதிக்கு வந்து ஓய்வு பெற்றோம். மறுநாட் காலை எல்லோரும் யமுனையில் நீராடி, பின் பிருந்தாவனத்தை விட்டுப்புறப்பட்டு பர்ஸானா என்ற ராதையின் பிறப்பிடத்திற்கு வந்தோம். அங்கு கோயில் 60, 70 படிகள் ஏறும் அளவு உயரத் தில் இருந்தது. அங்கு கண்ணன், ராதை ஆகியவர்களைத் தரிசித்துவிட்டுச் சகோதரிகள் எல்லாம் சேர்ந்து கும்மியடித் தோம். எங்கள் பயணம் இத்துடன் முற்றுப்புள்ளி பெற்றது. இங்கிருந்து புறப்பட்டு டில்லியை அடைந்தோம். அடுத்த நாள் டில்லியிலிருந்து புறப்பட்டு 2 இரவுகளும் 1 பகலும் பயணம் செய்து மதராஸுக்கு சுமார் 10 மணியளவில் வந்து சேர்ந் தோம். போகும்போது வழியனுப்பியவர்கள் மறுபடி வரவேற்க வந்துவிட்டுப் போனார்கள். மதிய சாப்பாடு, எல்லோருக்கும் திரு. ரங்கராஜன் அவர்கள், ஓட்டலில் விருந்து கொடுத்தார். 3 மணிக்கு அங்கிருந்து புறப்பட்டு இரவு 8–30 மணிக்கு எல்லோரும் திருச்சி ஜங்சனை அடைந்தோம். வழியனுப்ப வந்ததுபோல் வரவேற்கவும் எல்லாக் குடும்பத்தினரும் வந்த னர். யாவரும் பிரியா விடை பெற்றோம்.

ஸ்ரீ ராமகிருஷ்ணாய நம:

காசி நேபாள் யாத்திரை

1992-ம் வருடம் ஆகஸ்டு 31-ம் தேதி திங்கட்கிழமையான விநாயக சதுர்த்தியன்று காலை 6-15 மணி பல்லவனில் புறப்பட யாவரும் அவரவர் வீட்டிலிருந்து வந்து ஜங்ஷனில் கூடினோம். வழியனுப்பவென்று வந்தவர்கள் சிலர், மாலை, மரியாதைகள் நடைபெற்றன. ரயில் குறிப்பிட்ட நேரத்தில் திருச்சியை விட்டு நகர்ந்தது. சிறிது தூரம் சென்ற பின் யாவரும் சிறிது நேரம் நாமாவளிகளைப் பாடினோம். பின் பொட்டலம் கட்டிவந்த இட்டிலியைச் சாப்பிட்டோம். அன்று விநாயகர் பிரசாதமான கொழுக்கட்டையும் சிறிது எல்லோருக்கும் கிடைத்தது. ரயிலில் அவரவர்க்குரித்தான பேச்சும் தூக்கமுமாகக் கழித்து குறிப்பிட்ட நேரத்தில் சென்னையை அடைந்தோம். அங்கு எங்களை அழைத்துச் செல்லவேண்டிய பஸ் தாமதிக்கப்பட்டதால் மூட்டை, முடிச்சுகளுடன் எக்மோரிலேயே காத்திருந்தோம். பின்னர் 12-30 மணிக்கு முருகன் கல்யாண மண்டபம் போய் சேர்ந்தோம். அங்கு ஸ்வாமியைத் துதித்துவிட்டு நிவேதனம் செய்த விருந்து சாப்பாட்டை சாப்பிட்டோம். 3 மணிவரை ஓய்வுபெற்றுப் பின் சென்ட்ரல் ஸ்டேஷனுக்குப் புறப்பட்டோம். அங்கு எங்கள் மூட்டை, முடிச்சுகளை ஒழுங்கு படுத்தவே ஒரு மணி நேரமாயிற்று. நாங்கள் செல்லவேண்டிய வாரணாசி எக்ஸ்பிரஸ் 5-30 மணிக்குத்தான் என்பதால் சிறிது காக்க வேண்டியிருந்தது. எங்கும் சந்திக்காத சிலர் அந்த ஜங்ஷனில் சந்தித்தனர். எல்லோரிடமும் பிரியா விடைபெற்று இடத்தையும், சாமான்களையும் ஒதுக்கிய பின் ரயிலும் நகர்ந்தது. 6 மணிக்கு ஆரம்பித்த எங்கள் பாட்டும், பஜனையும் 8 மணிவரை கான மழையாகப் பொழிய ரயிலிலிருந்த சிலரும் ரசிக்கலாயினர். 'செவிக்குணவில்லாத போழ்தில் சிறிது வயிற்றுக்கும்' என்பதற்கொப்ப இதை நிறுத்தி இரவு சாப்பாட்டை முடித்துக்கொண்டு படுக்கையை விரித்தோம். காலை 5 மணியிலிருந்து ஒவ்

வொருவராக விழிக்கலாயினர். காப்பியைச் சாப்பிட்டு சுறு சுறுப்பை வரவழைத்துக்கொள்ள, மறுபடியும் பேச்சு, பாட்டு, படிப்பு, தூக்கம், டிபன், சாப்பாடு, வேடிக்கைகள் என்று இரண்டு இரவுகளையும், ஒரு பகலையும் கழித்தோம். ரயிலும் ஜபல்பூர், நாக்பூர், இட்டார்சி, மஹாநதி, சம்பல் பள்ளத்தாக்கு, யமுனை, அலகாபாத் என்று ஊர்களையும், இயற்கைகளையும் கடந்து 2-ம் தேதி காலை 10 மணி அளவில் வாரணாசியை அடைந்தது. அங்கு திரு. ரங்கராஜ னுக்கு அறிமுகமான பட்டு ஜவுளி வியாபாரி திரு. நாகர் என்பவர் எங்களை வரவேற்று, நாங்கள் தங்கவேண்டிய நகரத்தார் விடுதிக்குச் செல்லும்வரை, உதவிகள் செய்துவிட்டுச் சென்றார். டாக்சிகளை அமர்த்திக்கொண்டு அங்கு போய்ச் சேர்ந்தோம். நேரம் 11, 12 மணி ஆனதால் கங்கைக்குப் போக இயலாதென்று அங்கேயே குளித்துச் சாப்பிட்டு ஓய்வு பெற்றோம். பின்னர் அங்கு தொடரவேண்டிய நிகழ்ச்சிகளை ஒழுங்குபடுத்தி முடிவுசெய்துகொண்டனர். நடத்துனர் இருவ ரும் சத்திரத்து காரியதரிசியிடம், சென்று பார்க்கவேண்டிய இடங்களைக் குறித்த அறிக்கையை பெற்று, விபரங்களைப் பேசி, பிண்டதானங்கள் செய்ய சாஸ்திரிகளையும் பேசி முடித்துக் கொண்டோம். மற்ற இடங்களைப் பார்க்கவும் ஆட்களை ஆயத்தம் செய்து கொண்டோம்.

காசி புண்ணியத் தலங்கள் யாவற்றிலும் தலை சிறந்தது. முத்தித் தலங்கள் ஏழு. அதில் இதுவும் ஒன்று. மிகவும் பழமையான தலம். தெற்கு நோக்கி ஓடும் இயல்பான கங்கை இங்கு மட்டும் வடக்கு நோக்கி ஓடுவதால் இங்கு கங்கைக்கு பெருமை அதிகம். இந்த கங்கையில் 64 ஸ்நான கட்டங்கள் இருக்கின்றன. நதி வளைந்து இருப்பதால் ஒரு இடத்திலிருந்து மற்றவைகளையும் பார்க்கமுடிகிறது. அதில் முக்கியமான ஐந்து அஸிகாட், வரணாகாட், மணிகர்ணிகா காட் தசாஸ்வமேத காட், பஞ்சகங்கா காட் என்பன. வரணா, அஸி என்ற இரு நதி கள் இங்கு கங்கையில் சங்கமமாவதால் இதற்கு வாரணாசி என்ற பெயரும் இருக்கிறது. பினாரஸ் என்ற அரசன் பிற்காலத் தில் புதுப்பித்ததால் பனாரஸ் என்ற பெயரும் விளங்கலாயிற்று.

பிரம்மா பத்து அசுவமேத யாகங்கள் செய்த இடம்தான் தசாச்வமேத காட். மாலை 5 மணிக்கு நாங்கள் இந்த கட்டத்திற்குச் சென்று நீரை புரோட்சித்துக் கொண்டோம். கோயில்களைப் பார்க்கத் தொடர்ந்தோம். காசி ஜனநெருக்கம் நிறைந்த ஊர். சைக்கிள் ரிக்ஷாக்கள் ஏராளமாகச் சென்று கொண்டேயிருக்கின்றன. பெரிய தெருக்களில் எப்போதும் வண்டிகளும் ஜனங்களுமாக நெரிசலாக இருக்கிறது. அதிலிருந்து பிரியும் சந்துகள் நிறைய இருக்கின்றன. 6 அடி அகலம்தான் இருக்கும். இருபுறமும் கடைகளுடன் கூடிய குறுகலான பாதைதான். கோயில்கள் எல்லாம் இந்த மாதிரி சந்துகளில்தான் இருக்கின்றன. இங்கு சாலைகளில் மாடுகள் நின்றுகொண்டும், படுத்துக்கொண்டும், அலைந்துகொண்டும் அதிகமாக இருக்கின்றன. நல்ல ஊட்டத்துடன் 5 அடி உயரத்தில் இருக்கும் பெரிய, பெரிய மாடுகள், ஆனால் அது யாரையும் எதுவும் செய்வதில்லை. சலனமில்லாமல் சிவனே என்றிருக்கும். இங்கே மாடுகள் அம்மே என்று ஒலிக்காதாம், பல்லியும் அடிக்காதாம். காக்கைகள்கூட இருந்ததாகக் கண்ணில் படவில்லை. ஊட்டமான நாய்களும் திரிகின்றன. இங்கு தெருக்களில் எங்கு பார்த்தாலும் வெற்றிலை பாக்கு எச்சில், சாணி என்று அசுத்தமாக இருக்கும். சிறிது மழை வந்தாலும் போதும் சாணி கரைந்து பாதையெல்லாம் வழுக்க ஆரம்பித்து விடும். இதில் நடப்பதற்கு தனித்திறமை வேண்டும். நாம் சந்துகளில் நடக்கும்போது நம்மீது வந்து மோதுவது மனிதனா, நாயா, மாடா என்று புரியாது. இருபுறமும் கடைகள். அதையெல்லாம் பார்த்தும் பார்க்காததுபோல் முதலில் மாலை 6 மணிக்கு அன்னபூரணிகோயில் தரிசனம் செய்தோம். அம்பிகையின் திருவுருவம் அழகாக இருக்கிறது. சுற்றுப்பிரகாரத்தில் பற்பல மூர்த்திகளின் திருவுருவங்கள் இருக்கின்றன. இந்த கோயிலுக்கும், விசுவநாதர் கோயிலுக்கும் இடையே உள்ள அக்ஷயவடம் என்ற ஆலமரம் தரிசிக்க வாய்ப்பில்லாமல் போயிற்று. இதைக் கடந்து துண்டி விநாயகர் கோயில் தரிசனம் செய்தோம். இந்தக் கணபதி சற்று வித்தியாசமான அமைப்பு. செந்தூர நிறமுடன் இருந்தார். இதையடுத்து சாட்சி விநாயகர் கோயில்தரிசித்தோம். மூர்த்திஅழகாகவும், பெரிதாகவும்விளங்கு

கின்றது. அடுத்து விசுவநாதர் கோயிலுக்குள் நுழைந்தோம். இந்தக் கோயிலை முகம்மதியர்கள் இடித்து மசூதி கட்ட, அப்போது லிங்கத்தை மறைத்து வைக்க கோயில் குருக்களின் கனவில் இறைவன் அருளியவாறு பக்கத்திலேயே சிறிய இடத்தில் கோயிலை அமைத்து விசுவநாதரை பிரதிஷ்டை செய்துள்ளார்கள். கோயில்களில் எல்லாம் சலவைக் கற்கள் பதித்திருக்கின்றனர். தரையில் தேய்ந்துபோன விக்டோரியா காலத்து வெள்ளி நாணயங்கள் பதித்திருக்கின்றனர். பிரகாரத்தில் பல மூர்த்திகள் மஹாலக்ஷ்மி, அன்னபூரணி, பார்வதி என்று பல சந்நிதிகள் இருக்கின்றன. விசுவநாதர், கோயிலின் ஈசான மூலையில், மேற்கு நோக்கி வெள்ளித் தகடு பதித்த தொட்டியில் இருக்கிறார். பன்னிரெண்டு ஜோதிர் லிங்கங்களில் இதுவும் ஒன்று. காசியில் இறக்கும் மனிதன், மாடு, பறவைகளுக்கு இறைவன் தாரக மந்திரம் ஓதி முத்தி அளிப்பதாக ஐதிகம். இங்கு விசுவநாதருக்கு நாமே தொட்டுக் கும்பிட்டு பூசை செய்வதும், அபிஷேம் செய்வதும் குறிப்பிடத் தக்கது. இங்கு பூசை செய்யும் குருக்களை பண்டா என்று சொல்லுகிறார்கள், எல்லாச் சந்நிதிகளிலும் ஒவ்வொருவர் இருக்கிறார்கள். காசே கண்ணாக இருக்கிறார்கள். இந்த ஆலயத்தைச் சுற்றி வரும்போது 2 தங்கச் சிகரங்களையும் பார்க்கலாம். இங்கு தினமும் மாலை 7 மணிக்கு சப்தரிஷி பூஜையும், இரவு 9 மணிக்கு ச்ருங்கார பூஜையும் செய்கின்றனர். இதை ஒவ்வொருவரும் அவசியம் பார்க்கவேண்டியது. கோயிலுக்குள் அங்கங்கே நிறைய லிங்கங்கள் இருக்கின்றன. இதைத் தரிசித்த பின் இடிபாட்டுடன் கட்டிய மசூதியையும் பார்த்து விட்டு விசாலாட்சி கோயிலுக்குச் சென்றோம். இந்த அம்பிகைதான் நம் ஊர்களில் இருப்பதுபோல் கருங்கல்லில் காட்சி அளிக்கிறார். முன்னால் சிறிய உற்சவ மூர்த்தியும் இருக்கிறது. இதுவும் சிறிய கோயில்தான். பின் சத்திரத்தில் வந்து இரவு சாப்பாட்டை முடித்துவிட்டுத் தூங்கினோம்.

நாங்கள் சென்ற நேரம் கங்கையில் தண்ணீர் மிகுந்து இருந்ததால் எந்த நேரத்திலும் பிரவாகம் வர வாய்ப்பு இருக்கும். அதனால் படகில் சென்று 64 கட்டங்களையும்

பார்ப்பது உசிதமில்லை என்று சத்திரக் காரியதரிசி தடுத்து விட்டார். நாங்கள் புதனன்று 3ஆம் தேதி காலை கேதாரகட்டத்தில் ஸ்நானம் செய்து சங்கல்பம் செய்து, ராமேஸ்வரத்திலிருந்து எடுத்து வந்த மணலை இங்குதான் கரைத்தோம். அடுத்து அந்தக் கட்டத்திலேயே இருந்த கேதாரீஸ்வரர் ஆலயம் சென்றோம். இங்கு ஈஸ்வரனும் கௌரியும் இணைந்த லிங்கம் சுயம்பு. இந்த லிங்கத்தின் மேல் ரேகை இருப்பதை அறிந்து பண்டாவிடம் கேட்டதும் மலர்களை ஒதுக்கி அந்த ரேகையைக் காட்டினார். அது ஓரிரண்டு அங்குல அகலத்தில் நன்றாகத் தெரிந்தது. இது ஈஸ்வரன், பார்வதியை இணைக்கும் ரேகை தானாம். இது சற்று விசாலமான கோயில் பிரகாரத்தில் நிறைய மூர்த்திகள் இருந்தன. அதில் சலவைக் கல் தட்சிணாமூர்த்தி குறிப்பிடத் தக்கது. பின் அருகிலுள்ள குமாரசுவாமி மடம் சென்றோம். இங்கு குமரகுருபர ஸ்வாமிகளின் வாழ்க்கை விளக்கங்களைச் சில படங்கள் மூலம் காட்டப்பட்டிருந்தது. அடுத்து சிருங்கேரி மடம் சென்றோம். மூன்று பெரியவர்களும் சிலா ரூபத்தில் காட்சி அளித்தனர். அங்கு நாமாவளியைப் பாடினோம். அங்கிருந்து காமகோடீஸ்வரர் ஆலயம் செல்லப் புறப்பட்ட எங்களுக்கு வழியில் ஒரு வீட்டின் முன்னால் தொங்கவிடப்பட்டிருந்த பலகையில் ஸ்ரீ ராமகிருஷ்ணர் பாதுகை பிரதிஷ்டை செய்து 1868இல் தங்கிய இடம் என்று போடப்பட்டிருந்ததைப் பார்த்ததும், மகிழ்ச்சியும், ஆச்சரியமும் ஏற்பட்டது. எப்படியும் அதைப் பார்க்கவேண்டும் என்ற ஆவலில் அதற்குள் நுழைந்தோம். சிறிய வீடு தான். அதன் மாடியில் ஒரு அறையில் தான் நம் குருதேவரின் பாதங்களும் மற்ற தெய்வங்கள் சிலவும் காட்சி அளித்தன. நம் பக்க மடத்து சந்நியாசினிபோல் ஒரு வயதான மாது இருந்தார். முகத்தில் சாந்தம், அமைதி குடிகொண்டிருந்தது. நாங்கள் அங்கே உட்கார்ந்து சிறிது நேரம் பஜனை பாடினோம். நாங்கள் பாட ஆரம்பித்ததும் பெரிய $\frac{1}{2}$ அடி, $\frac{3}{4}$ அடி இருக்கும் ஜால்ராக்களைக் கொடுத்து உதவினார். நாங்கள் பாடியதை ரஸித்த அவர் ராமகிருஷ்ண சரணம் என்றபாட்டைத் தொடங்கியதும் ஒரே குதூகலத்துடன் தானும் கூடக் கூடத் தலையை ஆட்டிப் பாடினார். பின்னர் ஒரு பெட்டி நிறைய

இனிப்பை வைத்து நிவேதனம் செய்து எங்களுக்கு வழங்கினார். இப்படிப்பட்ட ஒரு நிகழ்ச்சியும், அந்த அன்பும் கிடைத்த நாங்கள் எல்லோரும் தாய்வீட்டிற்குப் போன மாதிரி களிப் புடன் அங்கிருந்து புறப்பட்டு காமகோடீஸ்வரர் ஆலயம் சென்றோம். இந்தக் கோயில் தென்னாட்டுப் பாணியில் அமைந்துள்ளது. இங்குள்ள கணபதியும், சூர்ய பகவானும் சோணபத்ரம் என்ற சிவப்புக் கல்லால் ஆனவையாம். பிரகா ரத்தில் சிவசயனம் இருக்கின்றது. இது நம் நாட்டிலேயே செங்கற்பட்டு மாவட்டம் சுருட்டுப் பள்ளி என்ற இடத்தில் மட்டும்தான் இருக்கிறது. காமகோடிப் பெரியவர்களின் திருவுளப்படி எல்லோரும் தரிசிக்க அங்கேயும் ஒன்று அமைத் திருக்கிறார்கள். இங்குள்ள அம்பிகையின் திருநாமம் காம கோடீஸ்வரி. இதையெல்லாம் தரிசித்துவிட்டு சிவப்பு நிற சிந்தாமணி வலம்புரி விநாயகரைத் தரிசித்தோம். பின் சத்திரத் திற்குச் சென்று சாப்பாடு, ஓய்விற்குப் பின் 4 மணி அளவில் புறப்பட்டு அன்னபூரணி கோயிலுக்குச் சென்றோம். அங்கு மேருவிற்கு இரண்டு தம்பதிகள் அர்ச்சனை செய்தோம். பின் காசி விசுவநாதர் கோயிலில் நாங்கள் ஏற்கெனவே பணம் கட்டி ஏற்பாடு செய்திருந்த அமைப்பின் படி மூத்தவர், இளையவர் என்று இரண்டு தம்பதிகள் அபிஷேகம் செய்தனர். பாலாபி ஷேகம் மட்டும் எல்லோருக்கும் செய்யும் சந்தர்ப்பம் கிடைத் தது. சிலர் அவரவர் இஷ்டம்போல் அபிஷேகப் பொருட்களை வாங்கித் தனித்தனியாகவும் அபிஷேகம் செய்தனர். இந்த இரு கோயில்களிலும் வாய்ப்பு இல்லாத மற்ற அனைவரும் விசாலாட்சி கோயிலில் அர்ச்சனை செய்து முடித்த பின் அவரவர் விருப்பத்திற்குச் செல்ல தலைப்பட்டனர். பின் இரவு 9 மணிக்கு விசுவநாதர் கோயிலில் நடக்கும் ச்ருங்கார பூஜைக்குச் சென்றோம். இரவு 8-30 மணி சுமாருக்கு பூஜைக்குத் தேவையான புஷ்பங்கள் மலர் மாலைகள், பிரசாதங்கள் யாவற்றையும் எடுத்துக்கொண்டு மேள வாத்தியத்துடன் நகரத்தார் விடுதியிலிருந்து கோயிலுக்கு வருகிறார்கள். விசுவநாதர் இருக்கும் சந்நிதியில் நான்கு புறமும் நுழை வாயில்கள் இருக்கின்றன. அங்குநாம் நாற்புறமும் உட்கார்ந்தும், நின்றும் பார்க்க வேண்டும்.

ஆண்கள் ஒரு புறம், பெண்கள் ஒரு புறம் என்று அவர்களே வகுத்து உட்கார இடம் வகுத்தனர். நாங்களும் பார்க்க ஆவலானோம். முதலில் விசுவநாதர் இருக்கும் தொட்டியையும், ஸ்வாமியையும், பழைய புஷ்பங்கள், அபிஷேகங்கள் எல்லாவற்றையும் நீக்கி, நன்றாக சுத்தப்படுத்துகிறார்கள். பின்னர் பால், தேன், விபூதி என்று வரிசையாக எல்லா அபிஷேகமும் செய்தபின் சந்தனத்தைச் செய்யும்போது அப்படியே அந்த மேல் விரலால் தேய்த்து கோடுகள் வரைந்தாற்போல் செய்து, அதன் மேல் மலர் வளையங்களை வர்ண, வர்ணமாக அடுக்கி வஸ்திரங்கள் வெள்ளியினால் ஆன நாகாபரணங்கள், சாற்றி குடைவைத்து அலங்காரம் முடித்து. மணி அடித்துக்கொண்டே வேத கோஷங்கள் முழங்க ஷோடசோபசாரங்கள் செய்து தீபாராதனை செய்கிறார்கள். அப்போது ஸ்வாமிக்கு அருகில் கட்டில், மெத்தை, பட்டு விரிப்பு எல்லாம் போட்டு அதில் பாதரக்ஷையை வைத்து விடுகிறார்கள். எல்லாவற்றிற்கும் தீபாராதனையைக் காட்டி முடிக்கிறார்கள். பிரசாதங்கள் பெற்று வெளியேறியபின் நல்ல சிந்தனையுடன் உறக்கம் பெற்றோம். மறுநாள் 4ஆம் தேதி வெள்ளிக்கிழமை காலை 6 மணிக்குப் புறப்பட்டு தசாச்வமேத காட்டில் கங்கையில் சங்கல்ப ஸ்நானம் செய்து பெண்கள் யாவரும் கூடி மஞ்சளில் அம்மன் வைத்து துதித்துப் பாடி, காதோலை, சீப்பு, கண்ணாடி, கருகமணி, காசுகள் எல்லாம் வைத்து கங்கைக்கு அர்ப்பணம் செய்தோம். பின் சத்திரத்தில் எல்லாத் தம்பதியரும், காசியில் செய்யவேண்டிய பிண்ட சிரார்த்தங்களைச் செய்தோம். அது முடிய மதியம் ஆனதும் உடனே சிரார்த்த சாப்பாட்டையும் முடித்தோம். 4 மணி அளவில் புறப்பட்டு காசிக்குக் காவலராக இருக்கும் காலபைரவர் கோயிலுக்குச் சென்றோம். கோயில் சந்துவரை ரிக்ஷாவிலும், டோங்காவிலும் சென்றோம். டோங்கா என்பது நால்வர் ஏறும் ஒரு பழைய கால குதிரை வண்டி. அந்தச் சந்தின் அருகில் இறங்கி நடந்தோம். இங்குதான் காசிக்கயிறு விற்பனை செய்கிறார்கள். இங்கு பைரவரைப் பார்க்க நுழைவுக் கட்டணம் ரூ. 5-00 கொடுத்து ஒவ்வொருவராக உள்ளே சென்றோம். அங்கே இருக்கும் பண்டா ஸ்வாமியைக் காட்டி, கயிற்றைப் படைத்து, மயிற்பீலி

யால் தலையில் தட்டி கயிறை கையில் கட்டி விடுகிறார். அங்கே ஸ்வாமிக்கு முகம் மட்டும் தெரிய மற்ற பாகங்களைத் துணியால் மறைத்திருக்கிறார்கள். நாம் உள்ளே நுழைந்ததும் துணியைத் தூக்கிக் காட்டி விளக்குகிறார். கீழே நாய் நிற்கிறது. காசிக்குச் செல்பவர்கள் இந்த பைரவரிடம் அனுமதி பெற்றுத்தான் திரும்பவேண்டும். இங்கிருந்து காசியில் எங்களை வரவேற்க நாகர் வீட்டிற்கு நாங்கள் அழைக்கப் பட்டதால் அது அருகில்தான் என்று எங்களை அழைத்துப் போனார்கள். ஆனால் நடக்க, நடக்க நீண்டு கொண்டே இருந்தது. இங்கு எந்த இடத்திற்குப் போகவேண்டுமென்றாலும் பக்கம்தான் என்பார்கள். 5 நிமிட நடை என்பார்கள். நமக்கு அரைமணி ஆகும். அது மட்டுமன்றி இங்கு சந்துகளில் நடப்பது அவ்வளவு இலகுவான காரியமல்ல. மழைத் தூறல் வந்தால் சாணியெல்லாம் கரைந்து மெழுகினாற்போல வழுக்க ஆரம்பித்துவிடும். அதுதவிர மாடுகள் குறுக்கும், நெடுகலுமாகப் படுத்திருக்கும். வெற்றிலைப் பாக்கு எச்சில் எங்கு பார்த்தாலும் வர்ணம் பூசினாற்போல் துப்பிக் கிடக்கும். தெருக்களில் சுத்தமே இருக்காது. இதை எல்லாம் கடந்து அவர் வீட்டிற்குள் நுழையும்போது சுமார் 6–30 மணி இருக்கும். அவர் வீடும், கடையும் மாடியில் இருந்தது. புடவைக் கடை என்றால் கேட்கவா வேண்டும் பெண்களுக்கு. அவ்வளவுதான். ஆளுக்கொரு பக்கம் புகுந்தார்கள். அது தவிர ஸ்படிக மாலைகளையும் தேவைக்கும், விலைக்கும் தக்கபடி அவரிடம் வாங்கினார்கள். சேலை வாங்காதவர்களும், வாங்கி முடித்தவர்களும் மறுபக்கத்தில் இருந்த வீட்டுக் கூடத்தில் உட்கார்ந்தோம். அத்தனை பேருக்கும் இரண்டு வகை இனிப்பும், கச்சோரி என்ற ஒரு காரமும் கொடுத்து, காபி, டீ எல்லாம் வழங்கினார்கள். நம் அன்பர்களுக்குச் சொல்லவா வேண்டும். குலோப் ஜாமுனில் மயங்கினர் சிலர். இதையெல்லாம் முடித்தபின், சிலருக்கு புடவை வியாபாரம் முடிய வெகு நேரமாகிவிட்டதால் சத்திரத்திற்குப் போக இரவு 10 ஆகிவிட்டது. சாப்பிட்டுத் தூங்கினோம். அடுத்த நாள் 5ஆம் தேதி சனிக்கிழமை காலை 5 மணிக்குப் புறப்பட்டு *சீதா* டிராவல்ஸ் பஸ்ஸில் அலகாபாத் போய்ச்

சேர்ந்தோம். யமுனை நதிக்கரையில் பஸ்ஸை நிறுத்தினோம். அங்கிருந்து திரிவேணி சங்கமம் அடைய இரண்டு படகுகளை அமர்த்திக் கொண்டு 15, 15 பேராக ஏறிக்கொண்டோம். படகு புறப்பட்டது தான் தாமதம். எல்லோருக்கும் நதியில் நீர் புரண்டதுபோல் களிப்பு கரை புரண்டது. ஒரே பாட்டும், கூத்தும், கும்மாளமுமாக சங்கமத்தை அடைந்தோம். ஒரு புறம் கங்கை நீர் வெந்நிறத்துடன் இருக்க, மறுபக்கம் யமுனை நீல நிறத்துடன் வர சங்கமம் நன்றாகவே தெரிந்தது. அந்தர்யாமியாக வரும் ஸரஸ்வதி பார்க்க முடியவில்லை. அங்கு எல்லோரும் ஆதாரத்துடன் ஸ்நானம் செய்ய மூங்கில் களைக் கட்டி வைத்திருக்கிறார்கள். அங்கே ஜோடி, ஜோடி யாக சங்கல்ப ஸ்நானம் செய்தோம். அங்கு செய்யவேண்டிய முறைப்படி படகில் உட்கார்ந்து, ஒவ்வொரு கணவனும் மனைவிக்கு பாதத்திலும், முகத்திலும் மஞ்சள் பூசி குங்குமம் இட்டு, சடை பின்னி பூவைத்து சடையின் நுனியை வெட்டி பிரயாகையில் இட்டு தானம் செய்தோம். கொண்டு வந்த காமிராக்கள் எல்லாம் அவ்வப்போது படம் பிடித்தன. யமுனை நதிக்கு அக்கரையில் தான் சோமேஸ்வரர் ஆலயம் இருந்தது. படகிலிருந்து பார்க்கப் புலப்பட்டது. நதியில் நீர் பிரவாகம் அதிகமாக இருந்ததாலும், மழைத் தூறல் இருந்ததாலும் அங்கு போக முயற்சிக்கவில்லை. பிரயாகை தீர்த்த ராஜா என்றால் அதன் பெருமையை சொல்லவா வேண்டும். எங்கள் காரியங்களை முடித்துக்கொண்டு படகிலேயே நாமாவளி களைப் பாடிக் கொண்டே சந்தோஷமாகக் கரைக்குத் திரும்பி னோம். எங்கள் படகோட்டி ப்ரகாஷ் என்பவரும் எங்களுடன் பாடிக் கொண்டும், ரசித்து கொண்டும் எங்கள் சந்தோஷத்தில் பங்கு பெற்றார். இந்தக் கரையில்தான் அக்பர் கட்டிய பெரிய கோட்டை இருக்கிறது. அதற்குள் அக்ஷயவடம் என்று சொல்லப்படும் ஆலமரம் இருக்கிறது. கோட்டைக்குள் இராணுவ முகாம் போட்டிருப்பதால் அந்த மரத்தைப் பார்க்க அனுமதி இல்லை. அதனால் பஸ்ஸிலேயே எல்லோரும் ஈர உடைகளைக் களைந்து மாற்றிக்கொண்டு அதைத் தானம் செய்தோம். பின்னர் சற்று தூரத்தில் இருந்த கோட்டை மதிலுக்கு வெளியே 15 அடி நீளமுள்ள சயன ஆஞ்சனேயரைத்

தரிசித்தோம். இவர் கையில் இராம, லட்சுமணர்களின் சிரம் இருக்கிறது. அடுத்து பஸ்ஸில் ஏறி நேரு குடும்பத்தார் வாழ்ந்த ஆனந்த பவனம் என்ற மாளிகைக்குச் சென்றோம். இந்த அழகான கட்டிடத்தில் நேருவின் குடும்பப் படங்களும், அவர் உபயோகித்த பொருட்களும் காட்சி அளித்தன. இதற்குள் போக ரூ. 2-00 கட்டணம் செலுத்தி சீட்டு வாங்கி னால்தான் அனுமதிக்கிறார்கள். ஒரு நூலகம் இருக்கிறது. பக்கத்திலேயே நேரு 'ப்ளானிடோனியம்' ஒன்றும் இருக்கிறது. அதைப் பார்க்க நேரம் ஒத்துவரவில்லை. அன்றைய மதிய உணவைத் தோட்டத்தில் இருந்த பலவண்ண ரோஜா மலர் களைப் பார்த்துக்கொண்டே சாப்பிட்டோம். முடித்த பின் அருகிலிருந்த பரத்வாஜர் ஆசிரமம் சென்றோம். அங்கு அவர் பூஜித்த லிங்கம் ஐந்து முகங்களுடன் அழகாக விளங்கியது. இதற்கு அடியில் குகைபோன்ற இடத்தில் ராமர் சிலையும், முனிவர்கள் சிலைகளும் இருக்கின்றன. பின்னர் அங்கு ஆட்டோ ரிக்ஷாவில் போய் அம்புப் படுக்கையில் இருந்த பீஷ்மர் சிலை, பக்கத்தில் இருந்த வேணி மாதவர் ஆலயம், வாசுகி ஆலயம் பார்த்தோம். இங்கு பாம்புகளின் சிலைகள் தான். எல்லாம் ஒரே பின்னல்களுடன் காட்சி அளித்தன. அங்கிருந்து துளசி மானஸ மந்திர் சென்றோம். இங்கு துளசிதாசர் பூஜை செய்த இடம், அவருடைய பாதுகை, துளசி மாலை எல்லாம் காட்சி கொடுத்தன. அமைதியான இடம். அங்கே இருந்த பழைய கால வண்ண ஓவியப் படங்க ளாக இருந்த தெய்வப் படங்கள் மனதை மிகவும் கவர்ந்தன. தவிர ராம, லட்சுமண, பரத, சத்ருக்னன் சிலைகளும், அதற்கு முன்னால் நிறைய சாளக் கிராமங்களும் இருந்தன. ஆஞ்சனேய ரும் இருந்தார். குருக்கள் தீபாராதனை காட்டி எங்களுக்கு தரிசனம் அளித்தார். மிகவும் அழகான சிலைகள். ஜிகினா வேலைப்பாடுகளுடன் கூடிய பளபளப்பான உடைகள் ஜகஜ் ஜோதியாகக் காட்சி கொடுத்தன. இங்கு ஒரு தெய்வீகம் நிரம்பிய பெரியவர் மங்கிய பார்வையுடன் படுத்திருந்தார். நாங்கள் எல்லோரும் அவரை வணங்கி ஆசி பெற்றோம். அங் கிருந்து புறப்பட்டு அயோத்திக்கு இரவு 12 மணிக்குப் போய்ச் சேர்ந்தோம். அங்கும் நகரத்தார் விடுதியில் தான்வாசம். முத்தித்

தலங்கள் ஏழினுள் அயோத்தியும் ஒன்று. அடுத்த நாள் 6ஆம் தேதி ஞாயிற்றுக் கிழமை காலை 6 மணிக்கு மழையும் வர சரயு நதியில் ஸ்நானம் செய்தோம். தொடர்ந்து மணி ராம் தாஸ் ஸ்வாமிகளின் மந்திர் சென்றோம். ராதாகிருஷ்ணர், ராமலட்சுமண சீதை மற்றும் பல ஸ்வாமிகளைத் தரிசித்தோம். இங்கு தினமும் 1000 பேருக்கு இலவசமாக அன்னதானம் செய்கிறார்களாம். அடுத்து எதிரிலேயே இருந்த வால்மீகி மண்டபம் சென்றோம். முழுவதும் சலவைக் கல்லால் கட்டப் பட்டது. சுவரில் இருபுறமும் ராமாயணம் பொறித்திருக்கிறது. உள்ளே நடுவில் இருந்த மேடையின் மேல் மத்தியில் வால்மீகி யும், இருபுறமும் லவ, குசர் நிற்க கம்பீரமாகக் காட்சி அளித் தனர். அங்கே இருந்த தூண்களில் நான்கு புறமும் துளசி தாசர், கபீர்தாசர் போன்ற மகான்களின் உருவங்கள், ராமாயணம் என்று பல விளக்கங்கள் காட்சி அளித்தன. அதில் குருதேவர் சித்திரமும் இருந்தது குறிப்பிடத்தக்கது. தூண் களின் மேல் பக்கம் ஒரு கயிற்றில் காவித் துணியில் சித்திரங் களுடன் இராமாயணம் வர்ணிக்கப்பட்டு, தொங்கவிடப் பட்டிருக்கிறது. மிக அழகுடன் விளங்கும் பெரியதோர் மண்டபம். அடுத்து நாங்கள் சென்ற பாதையில் சிந்தூர ஆஞ்சனேயரும், ஆடை, ஆபரண அலங்காரங்களுடன் இருந்த ஆஞ்சனேயரையும் தரிசித்துக்கொண்டே ஒரு சிறிய மலையை அடைந்தோம். அது 40, 50 படிகள் கொண்ட சிறிய மலை. இதைப் பார்த்தபோது பர்சானாவில் இருந்த ராதாகோவில் போலத் தோன்றியது. இங்கு இருந்த ஆஞ்சனேயர் முகம் மட்டும் செந்தூரம் பூசி, மற்ற உடல் பகுதி எல்லாம் மலர் களால் அலங்கரிக்கப்பட்டிருந்தார். தலையில் கிரீடமும், கையில் கதையும் இருந்தது. ராம ஜன்மபூமி அல்லவா அதனால் அங்கங்கே ஆஞ்சனேயர் தரிசனமளிக்கிறார். இதை அடுத்து இராமருடைய பட்டாபிஷேக மண்டபம், இங்கு பட்டாபிஷேகக் கோலத்தையும், அவர் அரசாட்சி செய்த இடத்தில் ராம, லட்சுமண, பரத, சத்ருக்னர் தம்பதியராக காட்சியளிப்பதையும் மற்றோர் இடத்தில் தசரதன் 4 புத்திரர் களுடன் இருப்பதையும், அவர் ஜனித்த இடம் எல்லாம் தரிசித்து வணங்கினோம். இராமர் அவதரித்த இடத்தில்

முகம்மதியர் பாபர் மசூதி கட்டியிருக்கிறார்கள். அதன் அருகிலேயே இந்துக்கள் இராமரின் உருவை வைத்துப் பூசிக்கிறார்கள். இதையெல்லாம் தரிசித்தபின் சீதை சமைத்த இடம், அடுப்பு, சப்பாத்திக்கல் யாகங்கள் நடந்த இடம், எல்லாம் பார்த்தோம். இப்போது அங்கே கலவரம் இருப்பதால் காவலர் பரிசோதனைக்குப் பின்தான் உள்ளே அனுமதிக்கிறார்கள். இதை எல்லாம் முடித்துக்கொண்டு வசிஷ்டர் குண்டம் என்னும் மண்டபத்திற்குச் சென்றோம். இதுவும் சலவைக் கல்லால் கட்டப்பட்ட இடம். இங்கிருந்த சுவர்களில் பலவித ஸ்வாமி ரூபங்கள் பதிக்கப்பெற்றிருக்கின்றன. வசிஷ்டருடன் இராம, லட்சுமண, பரத, சத்ருக்னர் அமர்ந்திருந்த காட்சி அழகாக இருந்தது. இதற்குப் பின்புறம் படியிறங்கிச் செல்லுமாறு ஒரு மண்டபம். அங்கு வால்மீகி, கச்யபர், கௌதமர், அத்திரி, விசுவாமித்திரர் ஆகியோரின் சிலைகள் இருக்கின்றன. இதையொட்டி இருந்த திறந்தவெளி மண்டபத்தில் துக்காராம், வாமதேவர், கிருஷ்ணர், ராமர் ஆகியோரின் படங்கள் இருக்கின்றன. இவை சரிகை வேலைப்பாடுகளுடனும், கற்கள் பதிக்கப்பெற்றும் பார்க்க மிக அழகாக இருக்கிறது. பின் பட்பட் என்னும் வண்டியில் நாங்கள் தங்கிய இடத்திற்குச் சென்றோம். ஆட்டோக்கள் போல 8, 10பேர் உட்காரக் கூடியது. நாங்கள் தங்கிய சத்திரத்தில் ஒரு சிறிய இராமர் கோவில் இருக்கிறது. அங்கு உட்கார்ந்து சிறிது நேரம் நாமாவளிகள் பாடியபின் சர்க்கரைப் பொங்கலுடன் மதிய சாப்பாட்டை முடித்தோம். பின் நாங்கள் சென்ற பஸ்ஸிலேயே புறப்பட்டு நந்தி கிராமத்தை அடைந்தோம். இராமன் காட்டிற்குச் சென்ற பின் பரதன் இந்த கிராமத்தில்தான் அவர் பாதுகைகளை வைத்துக்கொண்டு காத்திருந்தார் என்பதை இராமாயணத்தில் படித்திருப்பீர்கள். இங்கு ஸ்ரீராமனின் பாதுகைகள் வைத்து பரதன் பூசித்த இடம், இராம லட்சுமணர் புஷ்பக விமானத்தில் வந்து இறங்கிய இடம், பரதன் தபஸ் செய்த இடம், இராமர், பரதன் ஆலிங்கனம் செய்த இடம் எல்லாம் பார்த்தோம். அவர் ஆலிங்கனம் செய்த இடத்தில் ஓர் ஆலமாம் இருக்கிறது. அதன் விழுதுகள் பூமியில் படாமல் மறுபடியும் மரத்திலேயே பின்னிப் பிணைந்துகொண்டிருப்பது

குறிப்பிடத்தக்கது. ஸ்ரீராமர் சரயு நதியில் இறங்கி அந்தர் யாமியான இடத்தையும் குப்தகாட்டிற்குச் சென்றுபார்த்தோம். அயோத்தியில் இருக்கும் கோயில்கள் அநேகம். எல்லாம் பார்க்க வேண்டுமென்றால் மாதக்கணக்கில் இருக்க வேண்டும்.

மறுநாள் திங்கட் கிழமை 7ஆம் தேதி காலை 4 மணிக்குப் புறப்பட்டு நேபாளம் போகும் வழியிலுள்ள கோரக்பூரை அடைந்தோம். இங்கு ஒரு விடுதியில் குளித்துவிட்டு கோரக் நாதர் ஆலயத்தை அடைந்தோம். இந்த கோயிலின் சந்நிதி கள் ஒவ்வொன்றுக்கும் ஒரு தனிக் கட்டிடம் இருப்பதால் கோயில் பெரிய பரப்பளவில் இருக்கிறது. கோயில் முழுவதும் சலவைக் கல்லால் கட்டப்பட்டிருந்தது. இங்கு கோரக் நாத ஸ்வாமி, சிவன், ஹனுமான், சயனித்திருந்த பீமன் எல்லாம் தரிசனம் செய்தோம். பின் இங்கிருந்து புறப்பட்டு இரவு தங்கலுக்கு நாராயண காட்டை அடைந்தோம். அங்கு சப்த நதிகள் சங்கமமாகி நாராயணி என்ற பெயருடன் ஓடுகிறது. சிலர் அங்கு ஸ்நானம் செய்தனர். சிலர் விடுதியிலேயே இருந்து நீரைப் புரோட்சித்துக் கொண்டனர். 8ஆம் தேதி காலை ஸ்நானம் முடித்து புறப்பட்டு மதியம் 3 மணிக்கு நேபாளம் போய்ச் சேர்ந்தோம். இது இமய மலையின் ஒரு பகுதியில் இருக்கும் சிவஸ்தலம். சற்று உயர்ந்த இடம். குளிர் என்று முன்னெச்சரிக்கையாகச் சென்றோம். ஆனால் குளிர் வாட்டவில்லை. இதன் தலைநகரமான காட்மாண்டு என்ற ஊரில் இருக்கும் கௌசலா பகுதியில் இருந்த தர்ம சத்திரத்தில் தங்கினோம். இங்கு ஜனங்களும் ஊரும் வித்தி யாசமானதாக இருந்தது. எல்லா இடங்களிலும் கூட்டங் கூட்டமாகக் குரங்குகள். இங்கு வீடுகள் எல்லாம் ஓவியத்தில் வரைவது போன்ற சதுர அமைப்பு உடையது. கூரைகள் இல்லை. கம்பிகள் இல்லாமல் கண்ணாடிக் கதவுகள் வைத்த ஜன்னல்களில் திரைமட்டும் இருக்கிறது. பார்த்தால் பது காப்புத் தேவையில்லையோ எனத் தோன்றுகிறது. கட்டிடங் கள் அநேகம் பூசாமல் செங்கல்லாகவே இருக்கின்றன. மாலை 5 மணிக்கு முதலில் பசுபதிநாத் கோயில் தரிசனம். நந்தி பெரியதாக இருக்கிறது. இங்கு கொடிமரம் உடுக்கை கட்டிய

பெரிய திரிசூலத்துடன் இருக்கிறது. பிரகாரத்தில் கால பைரவர், ஸஹஸ்ர லிங்கங்கள் இருக்கின்றன. பசுபதிநாதர் சந்நிதி வெள்ளியினால் செய்யப்பட்ட கதவு, சுவர்களுடன் இருந்தது. அந்த சுவர்களில் அநேக லிங்கங்கள் இருக்கின்றன. 4 நுழைவாயில்கள். பசுபதிநாதர் நான்கு புறமும் நான்கு முகங்களும், ஈசான முகம் அருவமாக மேல் நோக்கியும் உள்ளவராக இருக்கிறார். இங்கு பூஜை செய்யும் பண்டா சிவப்பு ஆடை அணிந்து தலையில் உருத்திராட்சம் சுற்றியுள்ளார். சுவாமிக்கு தங்க ஆபரணம் சாற்றி பஞ்ச முகங்கள் ஐந்திற்கும் ஐந்து குடைகள் வைத்திருந்தனர். கீழே வலம்புரி சங்கும், சிறு லிங்கங்களும் இருக்கின்றன. பண்டா தீபாராதனை காட்டும் சமயத்தில் அங்கு வரும் மக்கள் அனைவரும் ஒரே ஆரத்திப் பாட்டைப் பாடுகின்றனர். முடிந்தவுடன் தீர்த்தம் தெளித்து மலர் கொடுத்தார். 8 மணிக்கே கோயிலை சாற்றிவிடுகிறார்கள். அடுத்த நாளான 9ஆம் தேதி புதன் கிழமையன்று காலை ஆசியாவிலேயே பெரியது என்னும் மைதீன் புத்தர் ஆலயம் சென்றோம். உட்கார்ந்தவாகில் இருந்த பிரம்மாண்டமான சிலை. நாற்புறமும் சுற்றிலும் இருந்த சுவர்களில் பலவிதமான புத்தமதத்தைச் சார்ந்த சிற்பங்கள் இருந்தன. இதை விட்டு வெளியேறும் போது எதிர்ப்புறமாக ஒரு புது அமைப்புள்ள கட்டிடம் இருக்கிறது. அது கீழே வட்டவடிவமாகவும், மேலே கூர்மையாக கோபுரம் போன்ற அமைப்புடனும் இருக்கிறது. அந்த வட்டத்தில் முகம் போட்டு இருக்கிறது. இதன் சிறப்பு என்னவென்றால் இந்த கட்டிடம் கல், காரை, மண் எதுவும் இல்லாமல் பருப்பு வகை சில தின்பண்டங்களை அரைத்துக் கட்டியுள்ளனர். இதற்கு தண்ணீர் கிடைக்காமல் அரசனிடம் நரபலி கொடுத்தால் மழை வருமென்று சொல்ல அரசன் தன்னையே பலியிட்டுக் கொண்டாராம். மழை வரும் சமயம் துணிகளை நனைத்துப் பிழிந்து நீரைச் சேர்த்தார்களாம். இதை அடுத்து வயல்வெளியில் தானாகத் தோன்றிய விஷ்ணுவைத் தரிசித்தோம். ஒரு விவசாயி தரையில் தோண்ட 1, 2, 4 என்று கடைசியில் பால் வடிய ஆரம்பித்ததாம். பயந்து போய் அரசனிடம் சொல்ல, அரசர் அனுமதியுடன் தோண்டியதும்

சிலை இருந்ததாம். சுற்றிலும் தண்ணீர் இருக்க மத்தியில் 11 பாம்புகள் பின்னிப் பிணைந்த படுக்கையின் மேல் சங்கு, சக்கரங்களுடன் விஷ்ணு மல்லாக்காகப் படுத்திருக்கிறார், மிகவும் அழகான சிலை, 15 அடி நீளம் இருக்கும். இதைப் பார்த்த பின் மியூஸியம் சென்றோம். இங்கு பலவிதமான பழங்கால சிற்பங்கள், ஓவியங்கள், அரண்மனையில் உபயோகித்த கத்தி, பட்டா, துப்பாக்கி, பீரங்கி போன்றவை காட்சி அளித்தன. இதுதவிர பலநாட்டு உடையுடன்கூடிய வெவ்வேறு நாகரீகம் கொண்ட பொம்மைகள், ராஜாக்களின் படங்கள் எல்லாம் பார்த்தோம். பிறகு பஸ்ஸில் பிரயாணம் செய்துகொண்டே நேபாள விமான நிலையம், விருந்தினர் மாளிகை, ஆஸ்பத்திரி, பள்ளிக்கூடம், பல நாட்டு ஸ்தானிகர் கட்டிடங்கள், தொலைக் காட்சி நிலையம், பழைய அரண்மனை, ஐந்து நட்சத்திர உணவு சாலை எல்லாம் கடந்து எங்கள் விடுதிக்குச் சென்றோம். சாப்பிட்டு ஓய்வு பெற்ற பின் மாலை கடைகள் நிறைந்த சூப்பர் பஜார் சென்றோம். சாமான்கள் வண்ண, வண்ணமாக, வகை, வகையாக இருந்தன. விலை கொள்ளை அதிகம் என்பதால் யாவரும் கண் பார்வையோடு வாங்காமல் திரும்பினோம்.

10ஆம் தேதி காலை வியாழனன்று பசுபதி நாதர் கோயிலில் ரூ. 150 பணம் கட்டி அபிஷேகம் செய்தோம். நான்கு புறமிருக்கும் நுழைவாசல் பக்கம் தான் பார்க்க முடியும். முன்னால் இருப்பவர்கள்தான் நன்கு பார்க்க முடியும். அபிஷேகம் முடிந்தபின் எல்லோர்க்கும் பிரசாதமும். ஆண்களுக்கு ஒவ்வொரு ருத்திராட்ச மாலையும் கொடுத்தார்கள். எல்லாம் பெற்றுக்கொண்டு சத்திரத்துக்குத் திரும்பி சாப்பாடு, ஓய்வு முடிந்து 3 மணிக்குப் புறப்பட்டு பக்திபூர் சென்று பழைய அரண்மனையைப் பார்த்தோம், வெளியில் இருந்த பூட்டியிருந்த கோயிலில் துர்க்கை பார்த்தோம். இங்கு வருடத்திற்கு 3 நாட்கள்தான் திறந்து பூஜை செய்வார்களாம். அரண்மனைக்கு வெளிப்புறம் வரும் பாதையில் இரண்டு புறமும் அந்த ஊர் பொருட்கள் விற்பனை செய்யும் கடைகள் இருந்தன. வேடிக்கை பார்த்த வண்ணம் வெளியேறினோம்.

இங்கிருந்து சிறிது தூரம் நடந்து ஒரு கிருஷ்ணன் கோவில் பார்த்தோம். இந்தக் கோயில் 10, 15 படிகள் ஏறிச் செல்லும் உயரத்தில் இருக்கிறது. படிகளின் இருபுறமும் சிங்கம், யாழி போன்ற மர வேலைப்பாடுகள் இருந்தன. படி ஏறியதும் 3, 4 அடி அகலம் கொண்ட சின்ன பிரகாரம். அதைச் சுற்றி வந்து கொண்டே தட்டி மறைவுக்குள் இருந்த கிருஷ்ணனைப் பார்த்தோம். இங்கு கண்ணன் நம் ஊர் கோயிலில் இருப்பதுபோல் கறுமையாக இருக்கிறார். அர்ச்சகர் இல்லாததால் திறந்த படி பார்க்க இயலவில்லை. இங்கிருந்து ஆட்டோவில் ஏறி பஸ்ஸிற்கு வந்து பின் தர்மசாலாவிற்குச் சென்றோம். தர்ம சாலாவிற்கு பக்கத்தில் இருபுறமும் வரிசை வரிசையாக 20 கடைகள் இருந்தன. அங்கேயே நம்மவர்கள் எல்லோரும் தேவையான விருப்பத்திற்குத் தகுந்தபடி வாங்கி முடித்தோம்.

11ஆம் தேதி வெள்ளியன்று காலை 4 மணிக்குக் காட்மாண்டை விட்டுப் புறப்பட்டோம். இருள் சிறிதே விலக விலக இயற்கை அமைத்துக் கொடுத்த ரம்மியங்கள் மனதிற்கும், கண்ணிற்கும் விருந்தாக இருந்தது. இமயத்தின் அடிவாரத்தில் இருந்த பனி மலை சிகரங்கள், மேகங்களின் மத்தியில் வெள்ளியை உருக்கி வார்த்தாற்போன்று காட்சி அளிக்க, மனம் கைலாயத்தின் கற்பனையில் மூழ்கத் தொடங்கியது. இப்படி பல ரசனைகளுடன் பஸ்ஸில் பிரயாணம் செய்த எங்களுக்கு நேரம் செல்லச் செல்ல அங்கங்கே அவ்வப்போது நேர்ந்த பரிசோதனைகளால் கோரக்பூரை அடைய இரவு 9–30 மணி ஆயிற்று. அங்கு சாப்பிட்டு, படுத்துறங்கி 12ஆம் தேதி சனிக்கிழமை காலை 5 மணிக்கு புறப்பட்டு 12 மணிக்கு வாரணாசியை அடைந்து நாங்கள் தங்கிய நகரத்தார் விடுதிக்கு வந்து சேர்ந்தோம். அங்கு எங்களுடன் வந்த நபருக்கு ஷஷ்டியப்த பூர்த்தி என்பதால் ஆயுள்ஹோமம், நட்சத்திரஹோமம், ஜபம் எல்லாம் நடைபெற்றன. முன்னேற்பாட்டின்படி பண்டா எல்லாம் தயாராக வைத்திருந்தார். இருந்தும் கொட்டும் மழையில் கங்கையில் ஸ்நானம் செய்து தீர்த்தம் கொண்டு வரும்படி ஆயிற்று. அந்த விசேஷம் முடிந்து எல்லோருக்கும் அவர்களுடைய விருந்து அளிக்கப்பட்டது. அன்று மாலை

ஒவ்வொருவரும், அவரவர் விருப்பத்திற்குத் தக்கவாறு இடங்களுக்குச் சென்று பார்க்கவோ, வாங்கவோ அனுமதிக்கப்பட்டனர். அதன்படி யாவரும் போய் வந்தனர்.

13ஆம் தேதி ஞாயிறன்று காலை 4 மணிக்குப் புறப்பட்டு புத்தகயாவை மதியம் 2–30 மணிக்கு வந்து சேர்ந்தோம். வழியில் மிக நீளமான ஸோன் நதி பாலத்தைக் கடந்தோம். சாப்பாட்டை முடித்துக்கொண்டு பஸ்ஸிலேயே புறப்பட்டுப் போய் முதலில் முகம்மதியர்களால் அழித்து, அழித்துப் புதுப்பிக்கப்பட்ட புத்தர் கோயிலை அடைந்தோம். 180 அடி உயரமுள்ள கோபுரம். அவருக்கு ஞானம் அளித்த போதி மரம். நான்கு முறை வெட்டி, வெட்டி தழைத்ததாம். 120 வயதான மரம் பார்த்தோம். பின்னர் தாமரைக் குளம். அதில் தியானம் செய்த இடம். அங்கு அவர் தியானம் செய்தபோது புயலும் மழையும் கொட்ட, ஒரு சர்ப்பம் வந்து தலை விரித்து அவர் நனையாமலிருக்க குடை பிடித்ததாம். அதே மாதிரி ஒரு சிலையை குளத்தின் நடுவில் அமைத்திருக்கிறார்கள். இரண்டாவதாக பூடான் நாட்டு புத்தர் ஆலயத்திற்குச் சென்றோம். இங்குள்ள சுவர்களில் அழகழகான வர்ண பொம்மைச் சித்திரங்கள் செதுக்கியெடுத்த தோற்றங்களுடன் இருந்தன. அதில் புத்தர் வரலாறுகளே விவரிக்கப்பட்டிருந்தன. நடுவில் கௌதம புத்தரும், இருபுறமும் மைதீன் புத்தரும் அமர்ந்தபடி காட்சி அளித்தனர். அடுத்து நேபாள நாட்டு புத்தர் ஆலயத்தில் அவர் பிறந்தது, பின் பிறப்பு, மூப்பு, இறப்பு என்ற மூன்று நிலைகளுடன் கூடிய படங்கள், அவர் தியானத்தில் இருக்கும்போது மிருகங்கள், பூதங்கள் என்று எல்லாம் வரையப்பட்டிருந்தன. 1989ம் வருடம் ஜப்பானில் செய்து கொண்டுவந்து வைத்த 80அடி உயரமான சிலை, என்றும் மனதைவிட்டு அகலாத ஒன்று. பிரம்மாண்டமானது. திறந்த வெளியில் கம்பீரத்துடன் உட்கார்ந்திருந்த நிலையில் இந்த சிலையை பார்க்க ஆகாயத்தில் மேகக் கூட்டங்களுக்கு மத்தியில் ஓவியர் வரைந்த படம்போல தோற்றமளித்தது. பாதிக் கண்கள் மூடித்திறந்த தியான நிலை. விரல் நகங்கள்கூட இயற்கையாகவும், தெளி

வாகவும் அமைந்திருந்தன. எல்லோரையும் கவரக்கூடியதாக இருந்தது. அந்தக் கல்லில் விரிசலோ பின்னங்களோ ஏற் படாமல் இருக்க, முதுகுப்புறத்தில் துவாரம் கொண்ட சிறு ஜன்னல் வைத்திருக்கிறார்கள். இறுதியில் பூடான், தாய் லாந்து, திபெத் ஆகிய பல நாடுகள் அமைத்த புத்தர் ஆலயங் களைப் பார்த்தபின் இரவு தங்கலுக்கு கயாவிற்குச் சென்றோம்.

கயாசுரன் என்ற நாராயணபக்தன் இங்கு தவமிருந்து நற்கதி பெற்றதால் இத்தலம் தூய்மை அடைந்து கயா எனப் பெயர் பெற்றது. பழமையான ஸ்தலம். பல்குண நதிக்கரை யில் இருக்கிறது. இந்த நதியில் 14ஆம் தேதி திங்கள் காலை ஸ்நானம் செய்துவிட்டு தம்பதி சகிதம் பிண்ட சிரார்த்தம் செய் தோம். வைத்த பிண்டங்களை மூன்று பாகமாகப் பிரித்து நதி யிலும் விஷ்ணு பாதத்திலும், அக்ஷயவடத்திலும் விட்டார்கள். ஸ்ரீராமர் தசரதருக்கு இங்கு பிதுர் காரியங்கள் செய்திருக் கிறார். நாங்கள் சென்றபோது மஹாளயம் முடிந்து மூன்றாம் நாள் உத்தரப்பிரதோஷம் என்று மக்கள் கூட்டம் நிரம்பி வழிந்தது. இந்தத் தலத்தில் நமது தீமைகள் சிலவற்றை விட்டுவிட வேண்டும். அதற்குப் பதிலாக இப்போது காய், கனி, இலை என்று விட்டுவிடுகிறார்கள். இதை முடித்துக் கொண்டு விடுதிக்கு வந்து மதிய உணவு சாப்பிட்டோம். மாலை 5 மணியளவில் இங்கிருந்து புறப்பட்டு இரவு 11-30 மணிக்கு வாரணாசி வந்து சேர்ந்தோம்.

15ஆம் தேதி செவ்வாய்க்கிழமை காலை பஸ்ஸிலேயே புறப்பட்டு துர்க்கை கோயில், சங்கட விமோசன ஆஞ்சனேயர், சத்ய நாராயண மானஸ மந்திர் ஆகியவற்றை தரிசித்தோம். சத்ய நாராயண மானஸ மந்திரில் ராம, லக்ஷ்மண, சீதை, ஆஞ்சனேயர், அன்னபூரணி, சத்ய நாராயணன் ஆகிய திருவுருவங்கள் இருந்தன. அடுத்து பிர்லா மந்திர் சென்றோம். அங்கு சிவன் துர்க்கை திருவுருவங்களும். சுவரில் ராமன் விளையாடியது, ஜடாயு வதம், ராவணன் சீதையைக் கடத்துவது போன்ற படங்கள் வரையப்பட்டிருந்தன. பின்னர் பஸ்ஸில் உட்கார்ந்த வண்ணமாகவே இருபது மைல்

விஸ்தீரணத்தில் உள்ள காசி பல்கலைக்கழக கட்டிடங்கள், அதை உருவாக்கிய மதன மோகன மாளவியா அவர்களின் இல்லம், மாணவர்கள் தங்கும் விடுதி, ஆஸ்பத்திரி என்று பார்த்தவாறே சென்றோம். இந்தப் பல்கலைக்கழகத்தின் விசேடம் என்னவென்றால் நன்கொடை இல்லாமல் படிப்பிருந்தால் சேர்த்துக் கொள்கிறார்கள். இதைக் கடந்து சாரநாத் சென்று, அங்குள்ள புத்தர் கோயில், பெரிய 'டூம்' என்று சொல்லப்படும் கல்லால் செய்யப்பட்ட ஸ்தூபி, பூமிக்கு அடியிலிருந்து, புதைபொருள்கள் ஆராய்ச்சியாளர்கள் கண்டு எடுக்கப்பட்ட பல உருவகங்கொண்ட கண்காட்சி, சிலைகள் எல்லாம் பார்த்தோம். விடுதிக்கு வந்தபின் மதியம் அவரவர் விருப்பப்படி ஒரு பொழுதுபோக்கு. மாலை 5 மணிக்கு எல்லோரும்சேர்ந்து சப்தரிஷி பூஜையைத் தரிசிக்க விசுவநாதர் கோயிலுக்கு போனோம். 7 மணி பூஜைக்கு 5 மணிக்குச் சென்றால்தான் அநுமதிச்சீட்டு பெறமுடியும். ஒருவருக்கு ரூ. 5–00 கட்டணம். நான்கு பக்க வாசல்களில் மூன்று பக்கத்தில் இருந்து பார்க்கலாம். கட்டணச் சீட்டு கொடுக்கும் இடத்துக்குப் பக்கம் ஒரு சிறு கூடம்போல் இருந்தது. அங்கு 7 மணி வரை நாமாவளிகளைபாடி பொழுதைக் கழித்தோம். நேரமானதும் அங்கு நின்று பார்க்கத் தயாரானோம். ஏழு அந்தணர்கள் அமர்ந்து வேத கீதங்கள் முழங்க, பயபக்தி யுடனும், நிதானமாகவும் அபிஷேக, ஆராதனைகள் செய்யும் காட்சி கண்கொள்ளா காட்சி. அவர்கள் தலையை ஆட்டி, ஆட்டி மணியை வித்தியாசமான முறையில் தலைக்கு மேலும், வயிற்றுக்கும் கொண்டுபோய் அடிப்பதே ஒரு பிரமிப்பாக இருக்கிறது. அவர்கள் செய்யும் முறையைப் பார்த்தால், விசுவநாதரை உடனே நேரில் வந்து பிரத்யட்சமாகும்படி கட்டளையிடுவதுபோல் இருக்கிறது. நமக்கும் ஒரு ஆவேசம் வந்தாற்போல் இருக்கிறது என்றும் மனதில் பதிந்த ஒன்று.

மறுநாள் புதன்கிழமை 16ஆம் தேதி எங்கள் பயணத்தின் இறுதி நாளான இன்று எல்லாரும் 4 பேராக ஆட்டோவில் போய் கோயில்களை தரிசித்தோம். முதலில் திரிபுரா காட்டில் இருக்கும் வாராஹி கோயில் சென்றோம். இந்த கோயிலில்

இரவு 12 மணிக்கு அபிஷேக ஆராதனைகள் செய்து 3 மணிக்குப்பின் சூரிய உதயம்வரை தரிசனத்திற்கு அனுமதித்து பின் கோயிலை மூடிவிடுவார்கள் என்பதை அறிந்த நாங்கள் 6 மணிக்குச் சென்றுவந்தோம். பூமிக்குக்கீழ் அறையில் தேவி நின்ற கோலத்தில் இருக்கிறதால் தரையில் உள்ள சிறு ஜன்னல் துவாரத்தின் வழியாகத்தான் இவரை தரிசிக்க வேண்டும். 5 அடிக்கு அப்பால் உள்ள துவாரம் வழியாக பாதத்தை பார்க்கலாம். இதை அடுத்து திலபாண்டேசுவரர் கோயில் தரிசனம். இங்குள்ள லிங்கம் தினமும் எள்ளளவு வளருவதாகச் சொல்கிறார்கள். திலம் என்றால் எள். லிங்கம் பெரியதாக உள்ளது. அதனால்தான் இவருக்கு அப்பெயர் உண்டாயிற்றாம். இக்கோயிலினுள் ஐயப்பன் ஆலயம், பாதாள லிங்கமும் உள்ளது. இறுதியாக கௌடியம்மன் கோயில் தரிசனம். இத்தேவி ஒரு காலத்தில் ஈசுவரனைக் குறித்து தவம் செய்யும்போது ஸ்வாமி: என்ன வரம் வேண்டுமென்று கேட்டாராம். தேவி: காசிக்கு வந்து சேவித்தோர் அடையும் நற்பயன் அனைத்தும் தனக்கு வரவேண்டுமென்று கேட்டாராம். ஸ்வாமி: அது முறையல்ல, காசிக்கு வந்து உன்னை காணாது போவாராயின், அவர்களுடைய புண்ணியம் உனக்கு வரட்டும். கௌடி வாங்கி உன்னை சேவித்தோர் முழுப் பயனையும் பெறுவார் என வரமளித்தார். அதன்படி இங்கு செல்வோர் கௌடி வாங்கி, காசிக்கு வந்த பலன் எனக்கு கௌடி உனக்கு என்று வணங்குவார்கள். இதையெல்லாம் முடித்துக்கொண்டு சத்திரம் வந்தோம். அன்று மாலை நாங்கள் புறப்பட வேண்டிய வாரணாசி எக்ஸ்பிரஸ் மாலை 5-30க்கு, 3 மணிக்கு அந்த இடத்தைவிட்டுப் புறப்பட்டால்தான், ரயிலில் உட்கார, செய்யவேண்டிய ஆயத்தங்கள் முடிய சரியாக இருக்குமென்று சொன்னார்கள். அதன்படி ஒவ்வொருவரும் கடைகளுக்குப் போய்க்கொண்டும், மூட்டை முடிச்சுகளைக் கட்டிக் கொண்டும் குறிப்பிட்ட நேரத்திற்கு எல்லாம் தயாராக இருந்தோம். ஆட்டோவில் ஜங்சனை அடைந்தோம். அங்கு வந்த பின், அன்று ரயில் 6 மணி நேரம் தாமதம் என்று தெரிய எல்லோருக்கும் ஏமாற்றமாகிவிட்டது. 3 மணி முதல் இரவு 9-30 மணிவரை மூட்டை முடிச்சுகளுடன் உட்கார்ந்திருந்தது

தான் எல்லோருக்கும் அலுப்பு ஏற்பட்டது. யாத்திரையில் திரிந்ததுகூட ஒன்றுமில்லை. ரயில் 9-30க்குப் புறப்பட்டு தாமதித்ததால் எங்கள் ஏற்பாடுகளில் மாறுதல் உண்டாயின. போன மாதிரியே 2 இரவுகளும் 1 பகலும் பயணம் செய்தோம். காலை 10 மணிக்கு வரவேண்டிய ரயில் மாலை 6 மணிக்குத் தான் சென்னையை அடைந்தது. அதனால் அன்று நாங்கள் பயணம் செய்ய இருந்த பல்லவன் எக்ஸ்பிரஸ்-ஐ தவறவிட்டோம். அதன்பின் ஒரு பஸ்ஸை ஏற்பாடு செய்துகொண்டு அதில் புறப்பட்டு காலை 4 மணிக்கு திருச்சி வந்துசேர்ந்தோம். வந்ததும் வராததுமாய் மூட்டை முடிச்சுகளைப் போட்டுவிட்டு ஸ்நானம் செய்துவிட்டு முன்னேற்பாட்டின்படி வந்த 2 வேன்களில் ராமேஸ்வரம் புறப்பட்டோம். சிலர் வரவில்லை. மற்றவர் அவரவர் வீட்டிலிருந்து தயாராகி வந்தனர். 6 மணிக்குப் புறப்பட்ட நாங்கள் வழியில் திருக்கோஷ்டியூர் சென்று பெருமாளை தரிசித்துவிட்டு ராமேஸ்வரம் போய்ச்சேர மதியம் 2:30 மணி ஆகிவிட்டது, அதற்குப்பின் ஒரு வீட்டில் தயாரித்த சாப்பாட்டை முடித்துக்கொண்டு சேதுவில் ஸ்நானம் செய்தோம். காசியிலிருந்து கொண்டுவந்த தீர்த்தங்களைக் கொண்டுபோய் கோயிலில் ரூ. 10க்கு கட்டணச் சீட்டு வாங்கி அபிஷேகம் செய்து ஸ்வாமி தரிசனங்களை முடித்துக்கொண்டோம். இரவு 7 மணி ஆயிற்று. நாங்கள் சாப்பிட்ட வீட்டிலேயே ஏற்பாட்டின்படி இட்லி தயாராகியிருந்தது. எல்லோரும் அங்கேயே டிபன் முடித்துக்கொண்டு வண்டி ஏறினோம். இரவு 3 மணிக்கு வீடு வந்து மங்கலகரமாக யாத்திரையை சுபத்துடன் முடித்தோம்.

சுபம்.

குறிப்பு :

காசி யாத்திரை செல்பவர்கள் தரிசிக்கும் முறை

விசுவேசம், மாதவம், துண்டிம், தண்டபாணிஞ்ச பைரவம், வந்தே காசி, குஹாம், கங்காம், பவானி, மணிகர்ணிகாம்.

முதலில் காலையில் மணிகர்ணிகையில் நீராடி, தூய்மையுடன் சென்று விசுவநாதரை வணங்கவேண்டும். அடுத்ததாக பஞ்சகங்கா கட்டத்திற்கு அருகில் உள்ள விந்துமாதவர் பின்பு துண்டி விநாயகர்கோயில். பின்னர் விசுவநாதர் ஆலயத்திற்கு வடகிழக்கில் உள்ள தண்டபாணி கோயில். தூண்மீது சிறிய உருவம் உள்ளது. அருகில் சிவலிங்கங்களும் உள்ளன. சிறிய கோயில். இதற்கடுத்தபடியாக இதற்கு அருகிலுள்ள கால பைரவர் சந்நிதானம். காசிக் கயிறு கட்டுமிடம். இவர் அனுமதி பெற்றுதான் காசியை விட்டுப்புறப்பட வேண்டும். அடுத்தது வந்தேகாசி, பைரவர் சந்நிதியின் மேற்கே சிறிது தொலைவில் ஒரு பெரிய ஆலமரத்தின்கீழ் உள்ள சிறியதேவி. வந்தே காசிக்கு அடுத்ததாக மேற்கே சிறிது தூரத்தில் ஒரு குகையும், அதன் அருகில் சிவலிங்கமும் உள்ள குஹா என்ற இடம். கங்கா என்பது பகீரதன் கங்கை கொணருமுன் இருந்த குளம். அதனால் அது ஆதிகங்கை எனப்படும். இதன் மேற்கு கரையில் மூன்று தேவிகளையும் நிறுவியுள்ளனர். பின்னர் அன்னபூரணி கோயில். இறுதியாக மணிகர்ணிகா கட்டம். இந்த பத்து இடங்களையும் முறையாகவோ அல்லது முன் பின்னாகவோ தரிசிக்கலாம்.

காசி நகரில் பல்லிகள் ஒலிப்பதில்லை. கருடன் பறப்பதில்லை என்ற காரணம் பின்வருமாறு : இராமர் இராவண வதம் செய்தபின் சேதுவில் சிவபூசை செய்வதற்காக அநுமனை காசிக்குச் சென்று சிவலிங்கம் கொண்டுவருமாறு ஏவினார். அநுமார் காசிக்குச் சென்று பார்த்தார். எங்கும் லிங்கங்கள் இருந்ததால் எது சுயம்பு லிங்கம் என்று தோன்றாமல் விழிக்க, அப்போது ஒரு லிங்கத்திற்கு நேரே கருடன் வட்டமிட்டது. அப்போது பல்லியும் நல்லுரை சொல்லியதும் அநுமார் சுயம்பு

லிங்கம் அதுதான் என்று அறிந்து எடுத்துக்கொண்டு புறப்பட்டார். இதைக் கண்ட காசியின் காவலனான கால பைரவர் என் அநுமதி பெறாமல் எப்படி நீ சிவலிங்கத்தை எடுக்கலாம் என்று தடுத்தார். அநுமானும் பைரவருக்கும் கடும் போர் நடந்தது. அப்போது அமரர்கள் வந்து பைரவரை வணங்கி, உலக நன்மைக்காக இச்சிவலிங்கம் தென்னாடு போக அநுமதிக்கவேண்டுமென்று வேண்டினார்கள். பைரவர் சாந்தி பெற்று லிங்கத்தைக் கொடுத்து அனுப்பினார். தன் அனுமதி பெறாமல் எடுக்க முயன்ற ஆஞ்சநேயருக்குத் துணை புரிந்த கருடன் காசி நகர எல்லைக்குள் பறக்கக்கூடாதென்றும் பல்லிகள் ஒலிக்கக்கூடாதென சாபமிட்டார். அச்சாபத்தின்படி பறப்பதும், ஒலிப்பதும் இல்லை. காசியில் பூவும், பிணமும் நாறுவதில்லை என்ற நியதியும் உண்டு.

ஸ்ரீராமக்ருஷ்ண அஷ்டோத்தர சத நாமாவளி :

ஓம் கதாதராய நம:
,, ராமக்ருஷ்ணாய ,,
,, கயாவிஷ்ணூத்பவாய ,,
,, க்ஷுதிராமாத்மஜாய ,,
,, சந்த்ரமணிப்ரியாய ,,
,, நிர்குணாய ,,
,, நரவராய ,,
,, அநவத்யாய ,,
,, அசலாய ,,
,, ஓம் ஸ்வரூபாய ,,
,, ஐம் ஸ்வரூபாய ,,
,, ஹ்ரீம் ஸ்வரூபாய ,,
,, கருணாகனாய ,,
,, தர்மஸம்ஸ்த்தாபகாய ,,
,, அவதாரவரிஷ்ட்டாய ,,
,, ஸர்வதர்ம ஸ்வரூபாய ,,
,, த்யாகீச்வராய ,,
,, யுகாவதாராய ,,
,, 'ஸ்ரீஜீ' நாமகாய ,,
,, மரணோர்மிவிநாசகாய ,,
,, வேத மூர்த்தயே ,,
,, குருமஹாராஜாய ,,
,, ஸநாதன புருஷாய ,,
,, அஹேதுக கருணாமூர்த்தயே ,,
,, ஸாம்யமைத்ரீ - திவ்ய தூதாய ,,
,, நிரஞ்ஜனாய ,,
,, மஹாஸமன்வயாசார்யாய ,,
,, சரணாகதவத்ஸலாய ,,
,, பூர்ணப்ரஹ்ம ஸநாதனாய ,,
,, ஸதானந்த புருஷாய ,,
,, பூர்ணாவதாராய ,,
,, ப்ரேமரத்னாய ,,
,, ஸர்வதேவதேவீ ஸ்வரூபாய ,,
,, க்ருபாமயாய ,,
,, கல்பசாகினே ,,

ஓம்	கபாலமோசனாய	நம:
,,	அஸ்ப்ருச்யோத்தாரகாய	,,
,,	குப்தாவதாராய	,,
,,	ஸமன்வயாசார்யாய	,,
,,	ஆதிநாதாய	,,
,,	ஜ்ஞானதானாவதீர்ணாய	,,
,,	ஜ்ஞான மூர்த்தயே	,,
,,	ஜ்ரும்பித யுகேச்வராய	,,
,,	ஜகன்மாத்ரு தர்சகாய	,,
,,	ஜனகணோத்தாரகாய	,,
,,	ஜகந்நாதாய	,,
,,	தந்த்ரபாரகாய	,,
,,	தீர்த்தஸ்வரூபாய	,,
,,	த்யாகிசிரோமணயே	,,
,,	த்ரிபுடீசூன்யாய	,,
,,	துரித தலனாய	,,
,,	தயாகனாய	,,
,,	த்யான ஸித்தாய	,,
,,	நரது:க்க வாரணாய	,,
,,	நிர்மான மோஹாய	,,
,,	பூர்ணப்ரஹ்மணே	,,
,,	பரமபித்ரே	,,
,,	ப்ராணாராமாய	,,
,,	புருஷோத்தமாய	,,
,,	பதிதோத்தாரகாய	,,
,,	ப்ராணஸகாய	,,
,,	பூர்ணஜ்ஞானினே	,,
,,	பூர்ண சக்தயே	,,
,,	பூர்ணபக்தாய	,,
,,	பூர்ணயோகினே	,,
,,	பூர்ணகர்மிணே	,,
,,	ப்ராண காந்தாய	,,
,,	பரமஹம்ஸாய	,,
,,	விச்வ பூஜிதாய	,,
,,	விச்வ பாலகாய	,,
,,	விச்வ கீர்த்தயே	,,

ஓம்	விச்வதாத்ரே	நம :
,,	விச்வ ஸ்ரஷ்ட்ரே	,,
,,	விபவே	,,
,,	விரஜஸே	,,
,,	விச்வேச்வராய	,,
,,	விவேகப்ரதாய	,,
,,	வ்ருத்தச்ரவஸே	,,
,,	விச்வவேதஸே	,,
,,	விச்வதர்ம ப்ரதீகாய	,,
,,	விச்வ கல்யாண க்ருதே	,,
,,	வேதார்ச்சிதாய	,,
,,	பவபந்தன கண்டனாய	,,
,,	வாஞ்சா கல்பதரவே	,,
,,	பக்த ஹ்ருதயரஞ்ஜனாய	,,
,,	ஸர்வஜ்ஞாய	,,
,,	மாத்ருபூஜகாய	,,
,,	யுகாசார்யாய	,,
,,	தர்மமேக ஸமாதிமதே	,,
,,	ரிபுசய மர்த்தனாய	,,
..	சாந்த தர்மத்வந்த்வாய	..
..	விச்வதர்ம ப்ரகாசகாய	..
..	ஸாதக சக்ரவர்த்தினே	..
..	ஸத்ய வ்ரதாய	..
,,	சித்கனாய	..
..	ஸர்வதோ பத்ராய	..
..	வேதாந்தோஜ்ஜ்வல பாஷ்ய ஸ்வரூபாய	..
..	சாரதாபத்யே	..
..	சாரதா ஸேவிதாய	..
..	கதாம்ருத ப்ரவர்ஷிணே	..
..	அபூர்வ ஸத்ய நிஷ்ட்டாய	..
..	ஸ்த்ரீபுருஷ ஸமக்ருபாய	..
..	பரமாசார்யாய	..
..	குரவே	..
..	பரமகுரவே	..
..	பராபரகுரவே	..
..	பரமேஷ்டி குரவே	..
..	அகண்டவிலீனாய	..
..	ஸ்ரீஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸதேவாய	..

ஓம் நானாவித மந்த்ர பரிமள பத்ர புஷ்பாணி
ஸமர்ப்பயாமி //

ஸ்ரீ சாரதா தேவி அஷ்டோத்தர சத நாமாவளி:

ஓம் ஓங்காரமந்த்ர விசதாயை நம:
,, ஹ்ரீங்கார்யை ,,
,, ஸர்வ மங்கலாயை ,,
,, நரரூபதராயை ,,
,, சாந்தாயை ,,
,, சரணாகத வத்ஸலாயை ,,
,, சாரதாயை ,,
,, சாரதாம்போஜ வதனாயை ,,
,, நிஷ்களாத்மிகாயை ,,
,, ராமக்ருஷ்ண கதப்ராணாயை ,,
,, ஸர்வதர்ம ஸ்வரூபிண்யை ,,
,, ஸர்வஸம்பத்கர்யை ,,
,, நித்யாயை ,,
,, விவேகானந்த தாயின்யை ,,
,, ப்ரஹ்மானந்தார்ச்ரிதாயை ,,
,, பூர்ணப்ரேமவிஜ்ஞான சாரதாயை ,,
,, அகண்டாபேத துர்ய ஸ்ரீநிரஞ்ஜன விசுத்திதாயை ,,
,, அத்வைதாத்புத ஸம்யோக சிவ நிர்மலஸித்திதாயை ,,
,, வைகுண்டநாத ஸர்வஸ்வாயை ,,
,, வைகுண்ட ப்ரிய ஸாதிகாயை ,,
,, பராத் பரதராயை ,,
,, மந்த்ர விக்ரஹாயை ,,
,, ஸர்வ ஸௌக்யதாயை ,,
,, பக்த ப்ரியாயை ,,
,, பகவத்யை ,,
,, பத்ராண்யை ,,
,, பாவனாத்மிகாயை ,,
,, பவான்யை ,,
,, பாவனாகம்யாயை ,,
,, பவபாசவிமோசின்யை ,,
,, ஐங்கார்யை ,,
,, சங்காயை ,,
,, பக்தகிங்கர்யை ,,

ஓம் கருணாகர்யை நம :
,, மஹேச்வர்யை ,,
,, மஹாமாயாயை ,,
,, மதுராயை ,,
,, மோஹனாத்மிகாயை ,,
,, தாரிண்யை ,,
,, ஸர்வ ஸந்தாபஹாரிண்யை ,,
,, தர்மசாரிண்யை ,,
,, வாகீச்வர்யை ,,
,, குணமய்யை ,,
,, சர்வாண்யை ,,
,, ஸர்வ போஷிண்யை ,,
,, விச்வாச்ரயாயை ,,
,, விச்வ மாத்ரே ,,
,, விச்வ ரூபாயை ,,
,, விபாப்மிகாயை ,,
,, ஜகத்திதாயை ,,
,, ஜகன்னாதாயை ,,
,, ஜகத்ரய ஸுகப்ரதாயை ,,
,, ஜயந்த்யை ,,
,, ஜயதாயை ,,
,, ஸத்யபாஷிண்யை ,,
,, ஸர்வ ஸாக்ஷிண்யை ,,
,, சப்தாத்மிகாயை ,,
,, சிவாயை ,,
,, ஸர்வசக்திதாயை ,,
,, சர்மதாயை ,,
,, சுபாயை ,,
,, அத்ருச்யாயை ,,
,, பரமாயை ,,
,, பூர்ணாயை ,,
,, ஸர்வவித்யாப்ரதாயின்யை ,,
,, ஆர்யாயை ,,
,, ஸர்வேச்வர்யை ,,
,, ஸர்வ பாபக்ன்யை ,,
,, ப்ரஹ்மசாரிண்யை ,,

ஓம் விமலாயை நம :
,, விபுலாயை ,,
,, விஜ்ஞாயை ,,
,, பக்தானாம் அபயங்கர்யை ,,
,, பக்திமுக்திப்ரதாயை ,,
,, பக்த ஸெளபாக்யதாயின்யை ,,
,, பத்ராயை ,,
,, ஸ்ருஷ்டிஸ்தித்யந்த காரிண்யை ,,
,, காலஹ்ந்த்ர்யை ,,
,, கேவலானந்த விக்ரஹாயை ,,
,, கல்யாண்யை ,,
,, கர்ணபீயூஷஸுஸ்வராயை ,,
,, கர்மநாசின்யை ,,
,, சாரித்ர்ய தாயை ,,
,, சாருசீலாயை ,,
,, ஸரளாயை ,,
,, நித்ய பாலிகாயை ,,
,, நிஷ்களங்காயை ,,
,, நிராலம்பாயை ,,
,, நித்யசுத்தாயை ,,
,, நிராமயாயை ,,
,, ஜ்ஞானப்ரதாயை ,,
,, பவஹராயை ,,
,, நாதப்ரஹ்மமய்யை ,,
,, பராயை ,,
,, ஸர்வாபீஷ்டகர்யை ,,
,, ஸெளம்யாயை ,,
,, முனீந்த்ரகண ஸம்ஸ்துதாயை ,,
,, ஆத்யத்தசூன்யாயை ,,
,, வரதாயை ,,
,, ஸ்ரீவித்யா மந்த்ர மாத்ருகாயை ,,
,, நித்யானந்தகர்யை ,,
,, துர்காயை ,,
,, நிஸ்ஸங்காயை ,,
,, நிகமாச்ரிதாயை ,,
,, ஸ்னேஹ ஸம்பூர்ண ஹ்ருதயாயை ,,
,, பக்தஹ்ருத் பத்ம ராஜிதாயை ,,
,, ஜ்ஞானவைராக்ய ஸம்பன்னாயை ,,
,, ஸச்சிதானந்த ரூபிண்யை ,,

ஓம் நானாவித மந்த்ர பரிமள
பத்ர புஷ்பாணி ஸமர்ப்பயாமி //